வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 29.03.2022 செவ்வாய்க்கிழமை இதழ் : 114 பக்கங்கள் : 16

# புதிய அரசியலமைப்பு விடயத்தில் எச்சரிக்கையுடன் செயல்படுங்கள்

## தமிழ் தேசிய கூட்டமைப்பினரை எச்சரித்தார் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்

### 6 தமிழ் தேசிய கட்சிகளை அங்கீகரிக்க ரெலோ கோரிக்கை



கொழும்பு, மார்ச் 29

"புதிய அரசமைப்பு விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும் - எச்சரிக்கையுடன் செயல்படுங்கள்", என்று தம்மை சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களிடம் தெரிவித்துள்ளார் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர்.

மேலும், "13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்தியப் பிரதமரிடம் கடிதம் மூலம் கோரிய 6 தமிழ்த் தேசியக் கட்சிகளின் விடயத்தையும் இந்தியா அங்கீகரிக்க வேண்டும்" என்று இதன்போது செல்வம் அடைக்கலநாதன் எம். பி. வலியுறுத்தினார் என்றும் ஈழநாடுவுக்கு அறியவந்தது.

இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டன.

கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் மாலை 4.30 மணியளவில் நடைபெற்ற இந்த சந்திப்பு சுமார் 30 நிமிடங்கள் நீடித்திருந்தது. இதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன், பங்காளிக் கட்சிகளான புளொட்டின் தலைவர் த. சித்தார்த்தன், ரெலோவின் தலைவர்

15



## இந்தியா வழங்கிய உதவிக்கு நன்றி சொன்னார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 29

இலங்கைக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர், நேற்று இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இந்த சந்திப்பின் போது ,இந்தியா இலங்கைக்கு

15

## சமஷ்டி அரசியல் யாப்பை ஏற்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும்!

### இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி கடிதம்!

யாழ்ப்பாணம், மார்ச் 29


இந்தியாவின் நலன்களை உறுதிப்படுத்துவதற்கு ஈழத் தமிழ்த் தேசம் உறுதியாக செயல்பட்டு வரும் நிலையில், ஈழத் தமிழ்த் தேச மக்களின் நலன்களை பேணும் வகையில் இலங்கை அரசாங்கத்தின்மீது அழுத்தங்களை பிரயோகித்து, ஒற்றையாட்சி அரசியல் யாப்பை கொண்டு வருவதைத் தடுத்து - தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி அரசியல் யாப்பைப் பெறுவதற்கு இந்தியா உறுதிப்படுத்த வேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தி யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதரகம் ஊடாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கருக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

15

## தேசிய அரசில் பிரதமர் பதவி; பரிசீலிப்பதற்கு ரணில் தயார்!

கொழும்பு, மார்ச் 29



"தேசிய அரசு தொடர்பாகவோ, அதில் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்பது தொடர்பிலோ அரச தரப்பில் இருந்து நேரடியாக என்னுடன் யாரும் எதுவும் பேசவில்லை. அவ்வாறான வேண்டுதல்கள் முன்வைக்கப்பட்டால் பரிசீலித்து முடிவெடுப்பேன். நாட்டுக் காகவும் மக்களுக்காகவும் எதையும் செய்யத் தயாராகவுள்ளேன்."

15



## யாழ்ப்பாணம் பண்பாட்டு மையம் கலாசார அமைச்சிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29

இலங்கை - இந்தியாவின் நட்புறவு அடையாளமாக இந்திய அரசாங்கத்தால் 160 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாண பண்பாட்டு மையம் நேற்று திங்கட்கிழமை எளிமையான முறையில் திறந்து வைக்கப்பட்டது.

15

## அரசியல் தீர்வுக்காக அரசுடன் நாம் தொடர்ந்தும் பேசுவோம்!

### கூறுகிறார் கூட்டமைப்பின் தலைவர்



கொழும்பு, மார்ச் 29

நிரந்தரமான அரசியல் தீர்வைக் காண்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான அரசுடன் நாங்கள் தொடர்ந்து பேசுவோம். எனினும், அரைகுறையான அரசியல் தீர்வை நாங்கள் ஒருபோதும் ஏற்கமாட்டோம். இதை ஜனாதிபதியிடம் நேரில் எடுத்துரைத்துளோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

15

## ரணிலுக்கு பிரதமர் பதவியா? அடியோடு மறுக்கும் பெரமுன

கொழும்பு, மார்ச் 29

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதமர் பதவி வழங்கப்படவுள்ளது என வெளியாகும் தகவலை ஆளுங்கட்சி நிராகரித்துள்ளது.

"ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதமர் பதவியை வழங்கும் நிலைக்கு அரசு வங்குரோத்து அடையவில்லை. எமது வசம் தகுதியான பிரதமர் இருக்கிறார்." என்று

15

## எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு சென்றார் அமைச்சர் ஜெய்சங்கர்!

கொழும்பு, மார்ச் 29

இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இந்திய எண்ணெய் நிறுவனத்துக்கு (ஐ.ஓ.சி) சொந்தமான கொழும்பிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு விஜயம் செய்தார்.

இலங்கை இந்தியன் ஒயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மனோஜ் குப்தாவும் இந்த பயணத்தில் பங்கேற்றார்.

எஸ். ஜெய்சங்கரிடம் தற்போதைய எரிபொருள் இருப்பு குறித்து மனோஜ் குப்தா விளக்கினார். (அ)

## புலம்பெயர் தமிழர்கள் மீதான தடை குறித்து மீள்பரிசீலனை!

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 29

புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் மீள்பரிசீலனை செய்யப்படும் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழர்கள் முதலீடு செய்ய வர வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

15

# இப்படியும் நடக்கிறது...!

நாடு இன்று எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளைப் பெறுவதில் அரசாங்கம் தீவிர ஈடுபாட்டுடன் இருப்பதாகவே பலரும் கருத்து கூறிவருகின்றனர்.

இதுகுறித்து முன்னரும் ஒருதடவை ஊர்க்குருவி தனது கருத்துக்களை எழுதியிருந்ததை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். இது குறித்து, அரச வங்கி ஒன்றின் தலைவருக்கு ஊர்க்குருவி தனது யோசனைகளை சொன்னபோது, அதற்கு என்ன செய்யலாம் என்று அவர் கேட்டிருந்ததையும், முதலில் அவர்களுக்கு இலங்கை எமது தாய்நாடு என்ற உணர்வை ஏற்படுத்த இந்த அரசு முலவேண்டும் என்று கூறியதையும் தெரிவித்திருந்தேன்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் கிரிக்கெட் போட்டி நடந்தால், இந்தியா வெல்லவேண்டும் என்றே ஒவ்வொரு தமிழ்களும் விரும்புகின்றனர். அதற்கு என்ன காரணம் என்பதை புரிந்து கொண்டால் இலகுவாக இந்த விடயத்தை புரிந்துகொள்ளலாம்.

இந்த புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகள்மீது அரசாங்கம் கவனம் செலுத்தத் தொடங்கியிருப்பது எதனால் என்று நண்பர் ஒருவர் நேற்று கேள்வி எழுப்பினார்.

தெற்கில் ஓர் ஊடகவியலாளர் வீடுமீது இனந்தெரியாத கும்பல் ஒன்று அண்மையில் தாக்குதல் நடாத்தியிருந்தமை வாசகர்கள் அறிந்ததே.

அந்த ஊடகவியலாளர்தான், சில ஆண்டுகளுக்கு முன்னர் கூட்டமைப்பின் பேச்சாளர் ஆபிரகாம் சுமந்திரனின் சர்ச்சைக்குரிய பேட்டியை மேற்கொண்டவர். விடுதலைப் புலிகளின் கொள்கையை தான் ஏற்றுக்கொண்டவனல்ல என்று சுமந்திரன் தனது நிலைப்பாட்டை தெரிவிக்கப்போய், அதற்கு எதிராக இங்கு நமது 'தீவிர அரசியலாளர்கள்' போர்க்கொடி தூக்கியிருந்ததை மறந்திருக்க மாட்டீர்கள்.

அந்த ஊடகர், தான் நடாத்துகின்ற யூரியுப் சனலில் அடிக்கடி சர்ச்சைக்குரிய விடயங்கள் பற்றி முக்கிய பிரமுகர்களை பேட்டி காண்பார். அது, பல லட்சம் சிங்கள மக்களால் பார்க்கப்படுகின்ற ஒரு நிகழ்ச்சியாக இப்போது மாறியிருக்கின்றது.

அண்மையில், அவர் இரண்டு நபர்களைப் பேட்டி கண்டிருந்தார்.

அவர்களில் ஒருவரை புலம்பெயர் தமிழர்களின் தலைவர் என்று விழித்திருந்தார். ஆனால், அப்படியொருவரை புலம்பெயர் தமிழர்கள் அறிந்திருப்பார்களோ தெரியவில்லை.

புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடுகளைச் செய்ய தவியாய் தவித்துக் கொண்டிருப்பது போலவும், தன்னால் மாத்திரமே அதனை ஒருங்கிணைக்க முடியும் என்றும் அவர் சொல்லிக்கொண்டிருந்ததை, அப்பாவித்தனமாக அந்த ஊடகர் நம்பிக்கொண்டு, கேள்விக் கணைகளை தொடுத்துக்கொண்டிருந்தார்.

பின்னர் தான் தெரியவந்தது, அவரும் நமது அரசில் தலைவர் ஒருவரின் நெருங்கிய உறவினர் என்பது.

சிங்கள மக்கள் மத்தியில் மிகவும் பரபரப்பாக பார்க்கப்படும் இந்த நிகழ்ச்சியில் அப்படி ஒருவர் கதைத்தால், அது சிங்கள மக்கள் மத்தியில் போய்ச் சேரும் என்பதாலும், அப்படி போய்ச் சேர்ந்தால், பின்னர் அதனை ஒருங்கிணைக்கின்றேன் என்று புறப்படலாம் என்பதும்தான் அந்த நபரின் நோக்கமாக இருந்திருக்கவேண்டும்.

இந்தப் பேட்டி ஒளிபரப்பாகிய சில வாரங்களில் இன்னுமொருவர் தானே புலம்பெயர் தமிழர்களின் உண்மையான தலைவன் என்று கூறிக்கொண்டு, அதே நிகழச்சியில் கலந்துகொண்டார். சில காலம் திருகோணமலையில் வாழ்ந்த அந்த நபர், தானே ஜனாதிபதி கோட்டாபயவின் 'வியத்மக' என்ற அமைப்பின் தீவிர செயற்பாட்டாளர் என்று கூறியிருந்ததையும், திருகோணமலையில் 'வியத்மக'வின் கூட்டங்களை ஏற்பாடு செய்தவர்களுடன் காணப்பட்டதையும் அறிந்த திருகோணமலை ஊடகர் ஒருவர், அவரது அந்த காணொளிப் பேட்டியை எனக்கு அனுப்பி, இவர் எப்போது புலம்பெயர்ந்திருந்தார் என்பதையுமல்லவா அந்த பேட்டியாளர் கேட்டிருக்க வேண்டும் என்று என்னிடம் கேட்டார். அந்த ஊடகவியலாளரை தொடர்பு கொண்டு, நிலைமைகளை புரிந்துகொள்ள சொன்னேன்.

இவை நடந்தது பல வாரங்களுக்கு முன்னர்.

இப்போது வாசகர்களுக்கு புரிந்திருக்கும் என்று நினைக்கின்றேன். இந்த தென்னலங்கை ஊடகர், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது அவரது ஊடகப்பிரிவின் பிரதானியாகவும் இருந்தவர். இவரது கருத்துக்கள் பலராலும் கூர்ந்து கவனிப்படுவன. ஜனாதிபதியும்கூட அவரது நிகழ்ச்சிகளை பார்க்கின்ற ஒருவராக இருந்தாலும் அது ஆச்சரியத்திற்குரியதல்ல.

இந்தப் பேட்டியின் பிரதிபலிப்பாகவே, பாராளுமன்ற உறுப்பினர் கமகே, சர்வகட்சி மாநாட்டில் புலம்பெயர் தமிழர்களின் பொருளாதார உதவிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறியிருப்பார்.

புலம்பெயர் தமிழர்கள் முதலிடவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது.

ஆனால், அது என்ன புலம்பெயர் தமிழர்கள் மாத்திரம் கண்களுக்கு தெரிகின்றனர்? அண்ணளவாக அரை மில்லியனுக்கும் அதிகமான சிங்கள மக்களும் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர் தானே, அவர்களின் முதலீடுகளை ஊக்குவிக்கவும் ஏன் களம் இறங்கவில்லை என்றும் கேட்காமல் இருக்கமுடியவில்லை.

**- ஊர்க்குருவி**

# விரிவுரையாளர் பௌநந்தியின் கவிதைநூல் வெளியிடப்பட்டது!



யாழ்ப்பாணம், மார்ச் 29

கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் அ. பௌநந்தி எழுதிய "வலியும் வழியுமாக கவிஞர் சோ. பத்மநாதன் கவிதைகள்", என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்ற பெற்ற "ஜீவநதி" புத்தகக் கண்காட்சியின்போது ஓய்வு நிலை அதிபர் இ. இராகவன் தலைமையில் நடைபெற்றது

இந்த நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் இ. சர்வேஸ்வராவும் ஆய்வுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி முதல்வர் ச. லலீசனும் நிகழ்த்தினர்.

நூலின் முதல் பிரதியை ஓய்வு நிலை விரிவுரையாளர் வி.எ ஸ். குணசீலனும் சிறப்பு பிரதியை ஓய்வு பெற்ற அதிபர் ஆ. நடராசாவும் வெளியிட்டு வைத்தனர். (ஐ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 29

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்ட இந்த ஆண்டில் நாவலர் பெருமான் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது.

கனடா - ரொறன்ரோவில் வசிக்கும் சிவஸ்ரீ பால. திருகுணானந்தக்குருக்களின் ஆதரவில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் 13ஆவது சொற்பொழிவு நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வல்வெட்டித்துறை வேவில் வீரகத்தி விக்கினேஸ்வரா அறநெறிப் பாடசாலையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் "நாவலர் பெருமானின் கல்விப்பணி" என்ற தலைப்பில் சைவப்புலவர் செ. த. குமரன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)





"நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தலைப்பில் யாழ்ப்பாணம் தேசிய கலை இலக்கியப் பேரவையில் நடைபெற்ற புத்தக அரங்கப் பெருவிழாவின் முதல்நாள் நிகழ்வுகளான சிவசேகரம் கவிதைகள் நூலின் அறிமுக நிகழ்வு மற்றும் சிறுவர் அரங்க விழாவின் காட்சிகள்...!



இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை காரைக்கால் அம்மையார் குருபூசை இணுவில் காரைக்கால் சிவன் மணிமண்டபத்தில்நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறை தலைவர் கலாநிதி திருமதி விக்னேஸ்வரி பவநேசன், இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி அனந்தலட்சுமி ஆகியோர் விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.



சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் தவத்திரு மோகன்தாஸ் சுவாமிகளின் சமுதாயப் பணிகளை பாராட்டி அமெரிக்காவின் உலகத் தமிழ் பல்கலைக்கழகம் அவருக்கு சமூக சேவைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதை தாஜ் சமுத்ரா ஹோட்டலில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் வைத்து வழங்கிக் கௌரவித்தது.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
29.03.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், பங்குனி 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# நாட்டின் எதிரிகள்?

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான, சந்திப்பு, இடம்பெற்றதை தொடர்ந்து, அதற்கு எதிரான பிரசாரங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. சர்வதேச அழுத்தங்களை பலவீனப்படுத்துவதற்கு இந்த சந்திப்பை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றவாறு தமிழ் தேசிய தரப்புக்களிலிருந்து சிலர் கூறுகின்றனர். ஆனால் – மறுபுறமோ, இதுவரையில் அரசாங்கத்தோடு உல்லாசமாக இருந்த விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில குழுவினர், கூட்டமைப்பு, சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நாட்டை பிளவுபடுத்த முயற்சிப்பதாகப் பிரசாரங்களை மேற்கொள்கின்றனர்.

ராஜபக்ஷக்களின் யுத்த வெற்றிவாதத்தை தேர்தல் முதலீடாக்கியதில் இவர்களுக்கு பிரதான பங்குண்டு. இதேவேளை, விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின்போது, யுத்தத்துக்கு ஆதரவாக தென்னிலங்கையை தயார்படுத்தியதிலும் இவர்களுக்கு பிரதான பங்குண்டு. இவர்கள் இதுவரையில் ராஜபக்ஷக்களின் செல்லப்பிள்ளையாக இருந்தனர். ஆனால், இப்போது நிலைமை மாறிவிட்டது. இவர்களின் பிரதான எதிரி பஸில் ராஜபக்ஷவாவார். ஏனெனில், பஸில் ராஜபக்ஷ, இவர்களை அரசாங்கத்தின் செல்வாக்கு வட்டத்திற்குள்ளிலிருந்து வெளியில் வீசிவிட்டார். இப்போது ராஜபக்ஷக்கள் இல்லாமல் – ராஜபக்ஷக்களின் யுத்த வெற்றியை தேர்தல் முதலீட்டாக்கும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அதன் ஆரம்பம்தான் – ஜனாதிபதி கூட்டமைப்பு சந்திப்புக்கு எதிரான பிரசாரங்களாகும்.

மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் பல விடயங்களை அவர் செய்திருக்க முடியும். ஆனால், அவரோ, தன்னை சுற்றியிருந்த விமல், உதய கம்மன்பில போன்றவர்களின் விருப்பங்களையே நிறைவேற்றியிருந்தார். இப்போது அவரின் சகோதரர்களோ – மஹிந்தவின் சகாக்களை ஓரங்கட்டுவதன், மூலமே அத்த கட்டத்தை நோக்கி நகர முடியுமென்று கருதுகின்றனர்.

இலங்கைமீதான சர்வதேச அழுத்தங்களால் தமிழ் மக்கள் இதுவரையில் உரிய நன்மைகள் எதனையும் பெறவில்லை. ஆனால், இந்த அழுத்தங்கள் அனைத்துமே, இலங்கையின் இறுதி யுத்தத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இடம்பெறுகின்றது. அதேவேளை, இலங்கையில் தமிழ் மக்கள் கௌரவத்தோடும் சமத்துவத்தோடும் வாழும் வகையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். அத்துடன், 13ஆவது திருத்தச்சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டுமென்னும் கோரிக்கையை, இந்தியா தொடர்ந்தும் முன்வைத்து வருகின்றது.

இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளிடம், இலங்கை தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் சமூகமாகவும் தமிழ் சமூகம் மட்டுமே இருக்கின்றது. அதற்கான வாய்ப்புக்களையும் தமிழ் சமூகம் மட்டுமே கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் விரும்பியோ அல்லது விரும்பாமலோ, அரசாங்கம் தமிழர் தரப்புக்களுடன் பேசியாக வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றது. இந்தப் பின்னணியில்தான் ஆரம்பத்தில் முரண்டுபிடித்த ஜனாதிபதி, பின்னர் கூட்டமைப்பை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

தமிழ் மக்களின் நியாயமான பிரச்னைகளை தீர்க்காது விட்டால் – ஏதோவொரு வகையில் இலங்கை தொடர்பில் சர்வதேச அரங்குகளில் குற்றச்சாட்டுக்களும் விமர்சனங்களும் தொடரத்தான் போகின்றன. இதனை கருத்தில் கொண்டு, ஆகக் குறைந்தது 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதிலிருந்தாவது அரசாங்கம் முன்னேற வேண்டும். ஆனால், அது நடக்குமா? இந்த நாடு ஒருபோதுமே முன்னோக்கி பயணிக்கக்கூடாது – மாறாக நெருக்கடிக்குள் சிக்கி சீரழிய வேண்டுமென்னும் தீராத ஆசையோடு ஒரு தரப்பினர் இருக்கின்றனர்.

இந்தத் தரப்பினரின் விருப்பங்கள்தான் இந்த நாட்டில் இதுவரையில் வெற்றிபெற்றிருக்கின்றது. அரசாங்கம், அவ்வாறான தரப்புக்களின் விருப்பங்களுக்கு இடமளிக்கப் போகின்றதா – அல்லது, இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முயற்சிக்கப் போகின்றதா? நாட்டின் எதிரிகளுக்கு முன்னுரிமையளிக்கப் போகின்றதா அல்லது, நாட்டை சரியான பாதையில் கொண்டுசெல்ல விரும்பும் தரப்பினருடன் கைகோக்கப் போகின் றறதா? தமிழ் மக்களின் நியாயமான பிரச்னைகளை தீர்த்தால்தான் இந்த நாட்டிற்கு எதிர்காலமுண்டு!

# உக்ரைன் அகதிகளை குறிவைக்கும் பாலியல் தொழில் குழுக்கள்!

**அலசுவது இராஜதந்திரி**

வெடிகுண்டுகள், இரத்தக்களரி, அதிர்ச்சி, நாட்டின் பல பகுதிகளில் உங்கள் பிள்ளைகள் செல்வதற்குப் பள்ளிகள் இல்லை. பெற்றோருக்கான சுகாதார வசதியில்லை. பாதுகாப்பான வீடு இல்லை.

நீங்கள் அங்கிருந்து தப்பி ஓட முயல்வீர்களா?

ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, ஒரு கோடி உக்ரைனியர்கள் தங்களுடைய தாயகத்தில் இருந்து இதுவரை தப்பியுள்ளனர்.

பெரும்பாலானோர் உக்ரைனின் பிற பகுதிகளில் தஞ்சம் அடைகின்றனர். 35 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் எல்லை தாண்டி வெளியேறியுள்ளனர். அவர்களில் பெண்கள், குழந்தைகளே அதிகம். ஏனெனில், 60 வயதிற்கு உட்பட்ட ஆண்கள் தொடர்ந்து போராட வேண்டிய கட்டாயத்தை உக்ரைன் அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

போரால் ஏற்பட்ட குழப்பம், இந்த மக்களை "பாதுகாப்பு" தேடி வெளியேற வைக்கிறது. ஆனால், உண்மை என்னவெனில், உக்ரைனுக்கு வெளியிலும் அவர்கள் முற்றிலும் பாதுகாப்பாக இல்லை.

"மனித வேட்டையாளர்களுக்கும் ஆள் கடத்தல்காரர்களுக்கும் உக்ரைனில் நடக்கும் போர் ஒரு சோகம் அல்ல. இதுவொரு வாய்ப்பு. பெண்கள் மற்றும் குழந்தைகளே அவர்களுடைய இலக்குகள்," என்று ருவிட்டரில் எச்சரித்துள்ளார் ஐ.நா பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரெரஸ்.

உக்ரைனில் இருந்து பல இளைஞர்கள் துணைக்கு யாருமின்றி பயணம் செய்து கொண்டிருந்தனர். போலந்து மற்றும் பிற எல்லை பகுதிகளில், குறிப்பாக போரின் தொடக்கத்தில், குழந்தைகள் காணாமல் போனார்கள். அவர்களுடைய தற்போதைய இருப்பிடம் தெரியவில்லை.

அகதிகள் வருகைக்கு நன்கு அறியப்பட்ட ஒரு ரயில் நிலையத்தில், சுற்றிலும் திகைத்து நிற்கும் பெண்களும் அழும் குழந்தைகளும் கூட்டமாக இருப்பதைக் கண்டோம்.

தன்னார்வலர்கள், பலருக்கு ஆறுதலளித்து, பெரிய அளவிலான சமையல் பானைகளில் இருந்து சூடான உணவு வழங்கிக் கொண்டிருந்தார்கள். 20-களின் தொடக்க வயதில் இருக்கும் யுக்ரேனிய அகதியான மார்கெரிட்டா ஹூஸ்மானோவை, கீவில் நாங்கள் சந்தித் தோம். அவர் இரண்டு வாரங்களுக்கு முன்பு எல்லைக்கு வந்தார். ஆனால், சக அகதிகள் தவறான கைகளில் விழுவதைத் தடுக்க உதவுவதற்காகத் தொடர்ந்து அங்கேயே இருக்க முடிவு செய்தார்.

அவர் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருப்பதாக அஞ்சுகிறாரா என்று நான் கேட்டேன். "ஆம், அதனால்தான் அவர்களின் பாதுகாப்பு குறித்து நான் கவலைப்படுகிறேன்," என்று அவர் கூறினார்.

"பெண்களும் குழந்தைகளும் ஒரு பயங்கரமான போரிலிருந்து தப்பிக்க இங்கு வருகிறார்கள். அவர்களுக்கு போலிஷ் அல்லது ஆங்கில மொழி தெரியாது. என்ன நடக்கிறது என்று அவர்களுக்குத் தெரியாது. யார் என்ன சொன்னாலும் அவர்கள் நம்புகிறார்கள்.

இந்த ஸ்டேஷனுக்கு யார் வேண்டுமானாலும் வரலாம். நான் வந்த முதல் நாளில், இத்தாலியில் இருந்து வந்திருந்த மூன்று ஆண்களைப் பார்த்தோம். அவர்கள் பாலியல் தொழிலுக்காக விற்பதற்கு அழகான பெண்களைத் தேடிக் கொண்டிருந்தார்கள். நான் பொலிஸாரை அழைத்தேன். ஆம், இது சித்தப்பிரமை அல்ல. நான் சொல்வது உண்மைதான். இது பயங்கரமானது,"

உள்ளூர் அதிகாரிகள் இப்போது இன்னும் கொஞ்சம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளனர் என்று மார்கெரிட்டா கூறுகிறார். பொலிஸ் தொடர்ந்து ரயில் நிலையத்தில் ரோந்து செல்கின்றனர். ஆனால், பல ஆதாரங்களின் வழியே நாம் கண்டறிந்தபடி, மற்ற தவறான நோக்கமுள்ள நபர்கள் இப்போது மின்னும் அங்கிகளை அணிந்தபடி தன்னார்வலர்களாகக் காட்டிக் கொள்கிறார்கள்.

அவரும் அவருடைய குழந்தைகளும் போரால் பாதிக்கப்பட்ட உக்ரைனில் இருந்து அண்டை நாடான ருமேனியாவுக்குச் சென்றார்கள். அவர்கள் எல்லையில் அகதிகள் மையத்தில் இருந்தபடி வேறு நாட்டுக்கு செல்வதற்காக உதவி கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அப்போது போலி தன்னார்வலர்களாக அங்கிருந்தவர்கள், அவர்களைப் பற்றி விசாரித்துவிட்டுச் சென்றனர். பிறகு, அதே நாளில் மீண்டும் அவர்கள் திரும்பி வந்து, எலெனாவிடம் சுவிற்சர்லாந்து செல்வதற்குச் சிறந்த இடம் என்றும் பெண்கள் நிறைந்திருக்கும் வான் ஒன்றில் அவருக்கு இடம் கொடுப்பதாகவும் கடுமையான மொழியில் கூறியுள்ளார்கள்.

அந்த ஆண்கள் தன்னையும் தன் மகளையும் "கொச்சையாக" பார்த்ததாக எலெனா என்னிடம் கூறினார். அவருடைய மகள் பயந்து போயிருந்தார். வேறோர் அறையிலிருந்த தன் மகனை காட்டச் சொன்னார்கள். அவர்கள் அவரு டைய மகனை மேலும் கீழும் பார்த்தார்கள். பின்னர் அவர்கள் தங்களைத் தவிர வேறு யாருடனும் பயணிக்கக்கூடாது என்று வற்புறுத்தினார்கள். மேலும், அவர்களுடைய அடையாள அட்டைகளைக் காட்டச் சொல்லி எலெனா கேட்டபோது அவர்கள் கோபம் அடைந்தனர்.

அந்த ஆண்களிடம் இருந்து தன் குடும்பத்தை அப்போதைக்குக் காப்பாற்றுவதற்காக, மற்ற பெண்களும் அவர்களுடைய வானுக்கு வரும்போது அங்கே சந்திப்பதாக வாக்குறுதி அளித்தார். ஆனால், அவர்கள் சென்றவுடன், தன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு அங்கிருந்து தப்பி ஓடினார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களாக கருதப்படும் பாலியல் தொழிலுக்கான கடத்தல், உடல் உறுப்புகளுக்கான கடத்தல், அடிமைத் தொழிலாளர்களுக்கான கடத்தல் போன்றவை மட்டுமே அச்சுறுத்தலாக இல்லை. அகதிகள் தனிநபர்களாலும் சுரண்டப்படுகிறார்கள்.

மனித உரிமைகள் குழுக்கள் தங்கள் உயிருக்குப் பயந்து ஓடி வருபவர்களை நன்றாகக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றனர். அதற்கு முதலில், அந்த மக்களுக்குப் பாதுகாப்பு தேவை.

**கட்யா, அட்லெர்**
**பி.பி.சி. தமிழ்**

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**பங்குனி - 29 செவ்வாய்க்கிழமை**
**பிலவ வருடம் - பங்குனி 15**
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : திதித்துவயம்




**மேடம்**
வீண் அலைச்சல் குறையும். மனதில் நிம்மதி அதிகரிக்கும். குடும்பத்தினர் உங்களிடம் ஆலோசனை கேட்டு செயலாற்றுவர். கணவன், மனைவி இடையே கருத்து ஒற்றுமை ஏற்படும்.

**இடபம்**
குழந்தைகள் தொடர்பான சந்தோஷ செய்தி உண்டு. உங்கள் முயற்சியில் வெற்றி உண்டு. நிம்மதி ஏற்படும். பணியாளர்களுக்கு உற்சாகம் அதிகரிக்கும். செலவு கூடும்.

**மிதுனம்**
அனைவரிடமும் நேசமுடன் பழகி அன்பை பெறுவீர்கள். பேச்சில் கவனம் தேவை. எதிர்பாரத செலவுகள் உண்டாகும். அடுத்தவர்கள் கடனுக்கு நீங்கள் பொறுப்பேற்க வேண்டாம்.

**கடகம்**
பணியில் முழு கவனத்துடன் ஈடுபடுவது நன்மையைத் தரும். பணவரவு சற்றுத் தள்ளிப்போவது பற்றிக் கவலைப்பட வேண்டாம். விருந்தினர் வருகை உண்டு. முயற்சி வெற்றியில் முடியும்.

**சிம்மம்**
பெரிய நன்மை ஒன்றிற்காக சிறு அலைச்சல் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். நீங்கள் வெற்றி பெறுவதற்கான புதிய வாய்ப்புகள் வரும்.

**கன்னி**
பயணத்திட்டத்தில் திடீர் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது. வீடு, வாகன பராமரிப்பு வகையில் செலவுகள் ஏற்படும். எதிர்பாராத உதவி கிடைப்பதால் நிம்மதி காண்பீர்கள்.

**துலாம்**
பிறரிடம் நன்றி உணர்வை எதிர்பார்த்து ஏமாற வேண்டாம். உங்களுக்கு கீழே வேலை செய்பவர்கள் ஒத்துழைப்பு தருவார்கள். மற்றவர்களை அனுசரித்து சென்று நன்மை காண்பீர்கள்.

**விருட்சிகம்**
அடுத்தவர் நலனுக்காக செலவுசெய்ய வேண்டி இருக்கும். உறவினர் இடையே ஏற்பட்ட பிரச்னைகள் தீரும். குழந்தைகளின் அறிவுத் திறனை கண்டு மகிழ்ச்சி அடைவீர்கள்.

**தனுசு**
எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் பெரிதும் பாதிப்பில்லை. எடுத்த விஷயங்களில் சற்றுத் தாமதம் ஏற்பட்ட பின்பே முடியும். பேச்சினால் பிரச்னை வராதபடி கவனமாக இருங்கள்.

**மகரம்**
சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். எதுவும் சற்று நிதானமாக நடந்தாலும் நல்லவிதமாக முடியும். உதவக்கூடிய நட்பு கிடைக்கும். குழந்தைகள் மகிழ்வர்.

**கும்பம்**
சவாலான விஷயங்களில் வெற்றி பெறுவீர்கள். தன்னம்பிக்கை அதிகரிக்கும். புத்திசாலித்தனமாக செயல்படுவீர்கள். சொந்தபந்தங்கள் தேடிவந்து உங்களுடன் பேசுவார்கள். யோகமான நாள்.

**மீனம்**
கூடுதல் உழைப்பின் மூலம் நன்மை உண்டாகும். உழைப்பிற்கேற்ற பலன் பெற சற்றுப் பொறுமை தேவை. அனுபவ அறிவால் வெல்வீர்கள். பாராட்டு கிடைக்கும்.

# அபுதாபியில் அமைச்சர்கள், அதிகாரிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை

அபுதாபி, மார்ச் 29

அபுதாபியில் அந்நாட்டு அமைச்சர்கள், உயர் அதிகாரிகளுடன் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.

நான்கு நாள் பயணமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் டுபாய் மற்றும் அபுதாபி சென்றுள்ளார். முதலில் டுபாய் சென்று அங்கு பல்வேறு முதலீட்டாளர்களைச் சந்தித்துப் பேசினார். தமிழகத்தில் தொழில் தொடங்க அந்நாட்டு முதலீட்டாளர்களுக்கு



அழைப்பு விடுத்தார்.

அந்த வகையில், ரூ.2,600 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் சனிக்கிழமை பரிமாறிக்கொள்ளப்பட்டன.

டுபாய் பயணத்தை முடித்துக்கொண்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அபுதாபி சென்றுள்ள நிலையில் அந்நாட்டு அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டுள்ளார். அபுதாபி - தமிழகம் இடையே உள்ள வர்த்தகம் குறித்தும் அந்நாட்டில் உள்ள தமிழர்களின் நலன் குறித்தும் பேசப்படு வதாகக் கூறப்படுகிறது.

# வேலைநிறுத்தம் நேற்று தொடங்கியது தமிழகத்தில் ஒரு லட்சம் பொலிஸார்

சென்னை, மார்ச் 29

மத்திய அரசுக்கு எதிராக தொழிற் சங்கங்கள் நடத்தும் 2 நாள் வேலைநிறுத்த போராட்டம் நேற்று திங்கட்கிழமை தொடங்கியது. இதனை முன்னிட்டு தமிழகத்தில் ஒரு லட்சம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

மத்திய அரசின் பொருளாதார கொள்கைகள், தொழிலாளர் விரோத திட்டங்களுக்கு எதிராக தொழிற்சங்கங்கள் போராடி வருகின்றன. குறிப்பாக தொழிலாளர் குறியீடு, தேசிய பணமாக்கல் திட்டம், தனியார்மயம் போன்றவற்றை கைவிடுதல், தேசிய ஊரக வேலை உறுதி திட்ட ஊதிய உயர்வு, ஒப்பந்த தொழிலாளர்களை முறைப்படுத்துதல் உள்ளிட்ட12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்றன.



இந்த கோரிக்கைகளை வென்றெடுக்கும் நோக்கில் நேற்றும், இன்றும் நாடு முழுவதும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட இந்த தொழிற்சங்கங் கள் அழைப்பு விடுத்துள்ளன. நேற்று காலை 6 மணி முதல் நாளை காலை 6 மணி வரை நடைபெறும் இந்த 2 நாள் வேலை நிறுத்தத்தில் நாடு முழுவதும் 20 கோடிக்கும் அதிகமான அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் பங்கேற்பார்கள் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

அதேநேரம் இந்த வேலை நிறுத்தத்தால் மக்கள் பாதிக்காத வகையில் மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அத்துடன் மாநிலங்களும் இந்த போராட்டத்தை முறியடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு உள்ளது.

தமிழகத்தில், இந்த வேலை நிறுத்த போராட்டத்துக்கு, தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஆனாலும், போராட்டத்தில் தமிழக அரசு ஊழியர்கள் பங்கேற்றால் சம்பளம் பிடித்தம் செய்யப்படும் என்று தலைமை செயலாளர் வெ.இறையன்பு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# சமூக வலைதளங்களை கண்காணிக்க இஸ்ரேல் தொழில் நுட்பம் அறிமுகம்

## தமிழக காவல் துறை “சைபர் க்ரைம்” பிரிவு நடவடிக்கை

சென்னை, மார்ச் 29

தமிழக காவல் துறையின் சைபர்க்ரைம் பிரிவில், சமூக வலைதளங்களைக் கண்காணிக்க இஸ்ரேல் தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கொலை, கொள்ளை, கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களின் எண்ணிக்கை குறைந்து வந்தாலும், வங்கி மோசடி, கடனட்டை மோசடிகள், போலி கணக்கு மூலம் மோசடி செய்தல், சமூக வலைதளங்களில் போலி செய்திகளைப் பரவவிடுதல், அவதூறு பரப்புதல், இணையதளம் மூலம் பெண்கள், குழந்தைகளை மன ரீதியில் துன்புறுத்துதல், ஆன்லைன் மோசடி, வன்முறையைத் தூண்டும் வகையில் கருத்துகளைப் பதிவிடுதல் உள்ளிட்ட இணைய குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, இணைய குற்ற வழக்குகளில் விரைவாக துப்புதுலக்கும் வகையில் தமிழகத்தில் முதல் முறையாக சென்னை வேப்பேரியில் அதிநவீன இணைய தடய ஆய்வகம் உருவாக்கப்பட்டுள்ளது. இது விரைவில் பயன்பாட்டுக்கு வர உள்ளது.

அதேபோல, வாட்ஸ்-அப், முகநூல், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்களைக் கண்காணிக்க இஸ்ரேல் தொழில்நுட்பம் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக சென்னை பொலிஸாருக்கு இந்த தொழில் நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

# முதல்வரின் தனி விமானத்துக்கான பயண செலவை திமுக ஏற்றுள்ளது

## தங்கம் தென்னரசு விளக்கம்

சென்னை, மார்ச் 29

முதல்வரின் டுபாய் பயணத்துக்கு விமானம் கிடைக்காததால், தனி விமானம் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த தனி விமானத்துக்கான செலவை திமுக-தான் ஏற்றுள்ளது. தமிழக அரசின் நிதி செலவழிக்கப்படவில்லை என தமிழக தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு டுபாயில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முதல்வர் குடும்பச் சுற்றுலா மேற்கொண்டிருப்பதாக பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார். முதல்வரின் இந்த பயணம் முதலீடுகளை ஈர்ப்பதற்காக மட்டும் இல்லை. கடைக்கோடி தமிழகத்திலிருந்து வெளிநாட்டுக்கு வந்து உழைக்கும் ஒவ்வொரு குடும்பத்தினுடைய வளத்துக்காகவும்தான் எனவும் அவர் குறிப்பிட்டார்.

“உலக வர்த்தகப் பொருட்காட்சி முடியும்போதுதான் மிகப் பெரிய கூட்டம் வந்திருக்கிறது. கடந்த ஒரு வாரத்தில் உலகின் பல பகுதியிலிருந்தும் ஏராளமானோர் வந்துள்ளனர். இந்த நேரத்தில் அரங்கைத் திறப்பதுதான் சரியாக இருக்கும் என்பதை முதல்வர் உணர்ந்துதான் இந்தப் பயணத்தை மேற்கொண்டு உள்ளார். பழனிசாமி முதல்வராக இருந்த போது மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணங்களினால் எத்தனை ஆயிரம் கோடி முதலீடுகள் வந்தது. ஆனால், தற்போது இந்த 3 நாட்களில் டுபாய், அபுதாபி பயணங்களில் ஏறத்தாழ ரூ.6,200 கோடிக்கு முதலீடுகளை ஈர்த்து வெற்றிகரமான பயணத்தை முதல்வர் மேற்கொண்டுள்ளார் என அவர் கூறினார்.

## புதுவாழ்சு பெறுவோம்



முப்பத்தெட்டு ஆண்டுகள் பிணியுற்றிருந்த ஒருவனை இயேசு குணப்படுத்தியது இன்றைய நற்செய்தியாக அமைகிறது. இயேசுவிடம் பல நோயாளர் வந்து தம்மை குணமாக்கும் படி கேட்டிருக்கின்றதை விவிலியத்தில் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் இங்கு இயேசு நோயுற்றிருப்பவனைப் பார்த்து நலம் பெற விரும்புகிறீரா? என்று கேட்பது ஆச்சிரியப்படக் கூடியது. 38 ஆண்டுகள் நோயால் துன்புற்ற ஒருவனின் மனநிலை எப்படிப்பட்டதாக இருக்கும் என்று நாம் சிந்திப்போமானால் மனம் தளர்ந்த நிலையில் வேறு வழியின்றி அந்நோயை ஏற்றுக்கொண்டிருக்கலாம். அல்லது இதுதான் தன் விதியென்று எண்ணி அமைதியுற்றிருக்கலாம்.

இந்த நிலையிலே தான் இயேசு அவனுடைய வாழ்வில் தலையிடுகிறார். அவன் குணமடைய துடிக்கின்றார். இன்றும் நம் வாழ்விலும் நாமும் யேசு எம்மைக் கைவிடுவதில்லை. அத்துன்ப துயரங்களின் மத்தியிலே தான் இயேசு இருக்கின்றார். நாமும் அவரின் உதவியை நாட வேண்டுமென்று விரும்புகின்றார். இத் தவக் காலத்தில் நாமும் நம்மிடமுள்ள பாவப் பழக்கஙிகளிருந்து விடுபட இயேசுவோடு ஒத்துழைப்போம். புதுவாழ்வு பெறுவோம்.

**அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.**

# யாழ்.போதனா இரத்த வங்கியில் சகல வகை குருதியும் தட்டுப்பாடு!

## நோயாளர்களுக்கு குருதியை வழங்கமுடியாத ஆபத்தான நிலை

யாழ்ப்பாணம், மார்ச் 29

**யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் எல்லா வகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியாத ஆபத்தான நிலையில் இரத்த வங்கி இருக்கின்றது என தெரிவிக்கப்படுகின்றது.**

இரத்த வங்கியில் சராசரியாக இருக்கவேண்டிய குருதியின் அளவு 330 பைந்த் ஆகும். ஆனால் தற்போது இரத்த வங்கியில் 167 பைந்த் குருதி மட்டுமே இருக்கின்றது. இது இன்னும் நான்கு நாட்களில் முடிந்துவிடும். சராசரியாக நாளொன்றிற்கு 35-40 பைந்த் குருதி நோயாளர்களுக்கு இரத்த வங்கியிலிருந்து விநியோகிக்கப்படுகின்றது.

திட்டமிட்டபடி நடக்கவிருந்த இரத்ததான முகாம்கள் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் எதிர்பார்க்காத வகையில் எல்லா வகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நடைபெற்ற இரத்ததான முகாம்களிலும் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு காரணமாக குறைந்தளவு குருதிக்கொடையாளர்கள் மட்டுமே இரத்ததானம் செய்கின்றார்கள். ஆகவே இரத்த வங்கியில் அல்லது இரத்ததான முகாம்களில் ஏற்கனவே இரத்ததானம் செய்து நான்கு மாதங்கள் பூர்த்தியானவர்களும் புதிதாக இரத்ததானம் செய்யக் கூடியவர்களும் இந்த ஆபத்தான நிலையை தவிர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இரத்த வங்கி அழைப்பு விடுத்துள்ளது.

இரத்ததானம் செய்வதற்கான அடிப்படைத் தகுதிகளாக, 18 - 55 வயது வரை ஏற்கனவே இரத்ததானம் செய்திருந்தால் அவர்கள் 60 வயது வரை இரத்ததானம் செய்யலாம், குறைந்தது 50 கிலோ நிறையை கொண்டிருத்தல், ஈமோகுளோபினின் அளவு 12.5 ப ஆக இருத்தல், ஏற்கனவே இரத்ததானம் செய்திருந்தால் 4 மாதங்கள் பூர்த்தியாக வேண்டும், கொரோனா தடுப்பூசி ஏற்றியிருந்தால் 7 நாட்களின் பின்னர் இரத்ததானம் செய்யலாம் என்பன குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இரத்த தானம் செய்ய விரும்புபவர்களோ அல்லது இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்ய விரும்புவார்களோ 0772105375 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு உயிர் காக்கும் பணியில் இணைந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# எரிபொருள் நெருக்கடிக்கு புத்தாண்டுக்கு பின் தீர்வு!

கொழும்பு, மார்ச் 29

புத்தாண்டுக்கு பின்னர் எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காணப்படும் என எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

அத்துடன், 37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசலை ஏற்றிய கப்பல் நேற்று திங்கட்கிழமை நாட்டை வந்தடையும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், நாட்டின் சில பகுதிகளில் எரிபொருளை பெற்றுகொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றமையினை அவதானிக்க முடிந்தது. கொழும்புக்கு வெளியே உள்ள சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருள் பற் றாக்குறை காரணமாக மூடப் பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (அ)

# ‘போர் நிறுத்தப்படவேண்டும்’

## ரஷ்ய யுவதி கதிர்காமத்தில் வழிபாடு!

கொழும்பு, மார்ச் 29

“ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையில் நடைபெறும் போர் நிறுத்தப்பட வேண்டும். வெகு விரைவில் அமைதிப்பூ மலரவேண்டும்.”

-இவ்வாறு இறையாசி வேண்டி, கதிர்காமம் புனித பூமியில் தேங்காய் உடைத்து வழிபாட்டில் ஈடுபட்டுள்ளார் ரஷ்ய நாட்டு யுவதியொருவர்.

மேற்படி இரு நாடுகளுக்கும் இடையிலான போர் காரணமாக இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ள இரு நாட்டு பிரஜைகளினதும் விஸா காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் நாட்டு பிரஜைகள் கடும் கவலையுடன் நாட்களை கழித்துவருகின்றனர். தமது உறவுகளுக்கு என்ன நடந்துள்ளது என தெரியாமல் தவித்துவருகின்றனர்.

இந்நிலையிலேயே போர் நிறுத்தப்படவேண்டும் என ரஷ்யா நாட்டு யுவதியொருவர் வழிபாட்டில் ஈடுபட்டுள்ளமை அனைவரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது. (அ)



# அதிக விலைக்கு காஸ் விற்பனையா? 1311 இற்கு உடனடியாக முறையிடவும்

கொழும்பு, மார்ச் 29

சந்தையில் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிடவும் அதிக விலைக்கு ‘லிற்றோ கேஸ்’ விற்பனை செய்யப்படுமானால் அது தொடர்பில் முறைப்பாடு செய்யுமாறு லிற்றோ நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

1311 என்ற இலக்கத்துக்கு தொடர்பை ஏற்படுத்தி இது தொடர்பில் முறையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அதிக விலைக்கு கேஸ் விற்பனை செய்யும் முகவர்களின் அனுமதி பத்திரம் இரத்து செய்யப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# தேசிய வளங்களை இழந்து இலங்கை சர்வதேசத்திடம் கையேந்தும் நிலை!

## சாடுகின்றார் அநுரகுமார எம்.பி.

கொழும்பு, மார்ச் 29

தற்போது அரச வளங்கள் அழிக்கப்படுவதாகத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தி கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க, நாடு தேசிய வளங்களை இழந்து, சர்வதேச சமூகத்திடம் பிச்சை எடுக்கும் நாடாகமாறியுள்ளதாகவும் தெரிவித்தார்.

களனி பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் கூறினார்.

துறைமுகங்கள், அனல்மின் நிலையங்கள், எண்ணெய்த் தாங்கிகள், கரையோரங்கள், தோட்டங்கள் உள்ளிட்ட அரச வளங்கள்வெளிநாடுகளுக்குச் சொந்தமாக இருந்தால் நாடு இருக்குமா எனவும் அவர்



கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பருப்பு, எண்ணெய் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களைப் பெற இந்தியா மற்றும் சீனாவிடம் இருந்து தலா 1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கோரப்பட்டுள்ளது.

பங்களாதேஷிடம் இருந்து 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்ற அரசாங்கம், கடனைத் தீர்ப்பதற்கு மேலதிக அவகாசம் கோரியதுடன், சிமெந்து மற்றும் இரும்பு பெறுவதற்கு பாகிஸ்தானிடம் இருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாக பெற்றுள்ளது.

பால்மா மற்றும் கோதுமை மா இறக்குமதிக்காக அவுஸ்திரேலியாவிடம் இருந்து 300 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் கோரியுள்ள அரசாங்கம், உக்ரைன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு மத்தியில் எரிபொருள் மற்றும் எரிவாயுவைப் பெறுவதற்கு ரஷ்யாவிடமிருந்தும் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப்பெற்றது.

நாட்டை மேம்படுத்துவதற்கு தேவையான வேலைத் திட்டத்துக்கு முன்னுதாரண மாக செயற்படுவதற்கு தேசிய மக்கள் தயாராகவுள்ளது-என்றார். (அ)

# ரயில் ரிக்கெற்றுக்கு வந்தது சோதனை!

கொழும்பு, மார்ச் 29

நாட்டில் நிலவும் கடதாசித் தட்டுப்பாட்டை கவனத்தில் கொண்டு ரயில் பயண சீட்டுக்களை டிஜிற்றல் மயப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித் துள்ளார்.

டிஜிற்றல் முறைமைக்கு மாற்றுவது தொடர்பில் முறைமையொன்று திட்டமிடப் பட்டுவருவதாகவும் அமைச்சர் கூறினார்.

ரயில் பயண சீட்டுக்களை அச்சிடுவதற்குத் தேவையான கடதாசி பற்றாக்குறை காரணமாக கடதாசியைப் பயன்படுத்தும் முறைமையை இல்லாதொழித்து டிஜிற்றல் முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, பல்வேறு காரணங்களினால் ரயில் சேவைகளில் தாமதம் ஏற்படுவதாக மக்கள் மத்தியிலிருந்து முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் ரயில் சேவைகள் தாமதத்தை நிவர்த்தி செய்வதற்கும் நிலவும் குறைபாடுகளை சரி செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (அ)

# வயிற்றை மட்டும் சிந்திக்காதீர் நாட்டை பற்றியும் யோசியுங்கள்

## மக்களிடம் கேட்கிறார் மஹிந்தானந்த

கொழும்பு, மார்ச் 29

“வயிறு குறித்தும் வருமானம் பற்றியுமே நாட்டு மக்கள் சிந்திக்கின்றனர். எனவே, தற்போதைய நிலைமையையும் நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.” - என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நெருக்கடிக்கு மத்தியிலும் நாட்டு மக்களுக்கு அரசு தடுப்பூசிகளை வழங்கியது. அதனால்தான் இன்று எவ்வித அச்சுறுத்தலும் இன்றி போராட்டங்களை நடத்தமுடிகின்றது. இதற்கு காரணம் அரசுதான் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டில் தற்போது சிக்கல் ஏற்பட்டுள்ளமை உண்மைதான். அதற்காக மக்களிடம் மன்னிப்பு கோருகின்றேன். ஏப்ரல் முதலாம் திகதிக்குள் சமையல் எரிவாயு பிரச்சினை தீர்ந்துவிடும். அதன்பின்னர் எரிபொருள் பிரச்சினையும் தீரும். தற்போதைய நிலைமை என்பது தற்காலிகமானது, எனவே, வயிறு மற்றும் வருமானம் குறித்து மட்டும் மக்கள் சிந்திக்கக்கூடாது-என்றார். (அ)

# மருந்தகத்தில் கொள்ளை; பொலிஸாரால் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 29

கொட்டாவ-மஹல்வரால பிரதேசத்தில் உள்ள தனியார் மருந்தகம் ஒன்றில் 17 இலட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் பொருட்களை கொள்ளையிட்ட நபரொருவரை கொட்டாவ பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். சந்தேகநபர் வென்னப்புவ பிரதேசத்தை சேர்ந்த 57 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர், குறித்த தனியார் மருந்தகத்தில் இருந்து அதிக விலையுடைய விற்றமின் வில்லைகள், தைலங்கள் உள்ளிட்ட சிலவகை மருந்து பொருட்களை திருடியுள்ளார். இவரிடமிருந்து 274,000 ரூபா பணமும், 350,000 ரூபா பெறுமதியான பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர், குளியாப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள 36 தனியார் மருந்தகங்களை உடைத்து சுமார் 40 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களை திருடிய குற்றத்திற்காக 15 வருட சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலையானவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இந்த வருடத்தில் இதுவரையில் 7947 டெங்கு நோயாளர்கள் பதிவு!

கொழும்பு, மார்ச் 29

இலங்கையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 7 ஆயிரத்து 947 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் அதிகூடிய டெங்கு நோயாளர்கள் ஜனவரி மாதத்தில் 5 ஆயிரத்து 397 பேராகப் பதிவாகியுள்ளனர்.

பெப்ரவரி மாதத்தில் 1,826 நோயாளர்களும், மார்ச் மாதத்தில் 725 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரை கொழும்பு மாவட்டத்தில் அதிகூடிய டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அதற்கமைய 1,433 பேர் கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, கம்பஹா மாவட்டத்தில் 903 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள நிலையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் 803 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் குருநாகலில் 761 டெங்கு நோயாளர்களும், புத்தளத்தில் 538 நோயாளர்களும், களுத்துறையில் 499 நோயாளர்களும் மற்றும் காலி மாவட்டத்தில் 456 பேர் டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளனர் என்று தொற்றுநோயியல் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# பொருளாதார நெருக்கடியை தமிழர் சாதகமாக்குகின்றனர்

## ஐக்கிய இலங்கைக்கு பெரும் ஆபத்து என்கிறது தேசிய சுதந்திர முன்னணி

கொழும்பு, மார்ச் 29

**இலங்கையின் தற்போதைய நெருக்கடியை தமிழர்கள் சாதகமாக பயன்படுத்துகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புலம்பெயர் தமிழ் மக்களும் ஆபத்தான அரசியல் பொறியை வகுத்து வருகிறார்கள். போர்வீரர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து உருவாக்கிய ஐக்கிய இலங்கைக்கு துரோகம் இழைக்கவேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வலியுறுத்துகிறோம் என தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார்.**

‘போர் வீரனை’ ‘துரோகி’ யாக மாற்றும் நோக்குடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ‘ஒன்றிணைந்த பிளவுபடாத இலங்கையை’ உருவாக்குவதற்கு ஐந்து முன்மொழிவுகளை முன்வைத்ததாகவும், அது ‘தமிழீழமும் சிங்கள இலங்கையும்’ இணைந்த இலங்கை பற்றியது என்றும் சமரவீர கூறினார்.



ஜனாதிபதி ஊடகப் பிரிவு கலந்துரையாடல் தொடர்பான ஊடக அறிக்கையை வெளியிட்டு, ‘ஐக்கிய பிளவுபடாத இலங்கை’ என்ற வார்த்தைகளை பயன்படுத்தியுள்ளதாக தெரிவித்த சமரவீர, ஒன்றிணைந்த மற்றும் பிரிக்கப்படாத இலங்கை தொடர்பில் முன்னரும் இரு தரப்பும் கலந்துரையாடினார்களா என்பதில் சந்தேகம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது-என்றும் கூறினார். (அ)

# புத்தாண்டு காலப் பயண விவரங்களை சமூக வலைத்தளத்தில் பதிவிடாதீர்கள்!

## பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 29

சித்திரை புத்தாண்டு காலப் பகுதியில் தமது பயணங்கள் தொடர்பான விபரங்களை சமூக வலைத்தளத்தில் பதிவிடுவதை தவிர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

குறித்த தகவல்களை குற்றவாளிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளக்கூடும் எனவும் குறிப்பிட்டார்.

புத்தாண்டுக்கு முன்னரோ அல்லது புத்தாண்டின்போதோ பயணங்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பதிவிடுவதைத் தவிர்க்குமாறும் அவர் மேலும் கூறினார்.

அவ்வாறு பதிவிடுவதால் சமூக வலைத்தளங்களில், நட்பு பட்டியலில் உள்ள சிலரால் குறித்த தரவுகள் பெறப்பட்டு தங்களது வீட்டில் கொள்ளையிடுவதற்கான வாய்ப்புகள் உள்ளன எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார். (அ)

# இ.தொ.கா. உப தலைவர் ரூபன் பெருமாள் போட்டி

கொழும்பு, மார்ச் 29

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபைக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், உப தலைவர் பதவிக்கு ரூபன் பெருமாள் போட்டியிடுகின்றார்.

இது தொடர்பில் கட்சியின் மேல் மட்டத்துக்கு அவர் தெரியப்படுத்தியுள்ளார்.

30 ஆம் திகதி கூடும் தேசிய சபை முக்கியத்துவம்மிக்கதாக கருதப்படுகின்றது. புதிய தலைவரும் இதன்போது தெரிவு செய்யப்படவுள்ளார். தலைமைப் பதவிக்கு தற்போது இருமுனைப்போட்டி நிலவுகின்றது.

தேசிய சபை உறுப்பினர்களின் ஆதரவை பெறுவதில் தலைமைப் பதவிக்கு போட்டியிடும் இருவரும் தீவிரம் காட்டிவருகின்றனர். அது தொடர்பான பேச்சுகளும் இடம்பெறுவருகின்றன. (அ)

# பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கு வழங்குவதில் சிக்கல்

கொழும்பு, மார்ச் 29

விலை அதிகரிப்பு காரணமாக 200க்கும் குறைந்த மாணவர் எண்ணிக்கையை கொண்ட பாடசாலைகளுக்கு போசாக்கு உணவை தொடர்ச்சியாக வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

போசாக்கு உணவை பாடசாலைகளுக்கு விநியோகித்து வரும் சமூர்த்தி பெறும் குடும்பத்தினர் இதனைத் தெரிவித்தனர்.

சமூர்த்தி பெறும் குடும்பங்கள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக, பாடசாலைகளுக்கு போசாக்கு உணவை விநியோகிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக அவர்களுக்கு உணவு பொதியொன்றுக்கு 30 ரூபா வழங்கப்படுகின்றது.

சுகாதார அமைச்சின் பரிந்துரையின் அடிப்படையில் வாராந்தம் இரண்டு தடவைகள் முட்டை வழங்கப்படவேண்டும் என்பதுடன் அனைத்து நாட்களிலும் ஏதேனும் பழவகையும் கட்டாயம் வழங்க வேண்டும் என கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

எவ்வாறாயினும், விலை அதிகரிப்பு காரணமாக சில விநியோகத்தர்கள் ஒரு முட்டைக்கு பதிலாக அரைவாசி முட்டையை மாணவர்களுக்கு வழங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தமது பொருளாதாரத்தை வலுப்படுத்த வழங்கப்பட்ட இந்த சந்தர்ப்பமானது, மேலும் வாழ்க்கை சுமையினை அதிகரித்துள்ளதாக சமூர்த்தி பெறும் குடும்பத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

அதேநேரம், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இந்த போசாக்கு உணவு காரணமாக பயன்பெறும் சூழலில், அதனை தொடர்ச்சியாக வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக, அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# புது வருடத்துக்கு நிவாரணம் வருகிறது இடைக்கால பட்ஜெட்

கொழும்பு, மார்ச் 29

தமிழ் சிங்களப் புத்தாண்டுக்காக பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கும் விதத்தில் புதிய வரவுசெலவுத் திட்டம் ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

அரச செலவினத்தை அதிகபட்சமாக குறைத்து பொது மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரச செலவினத்தில் 5,300 கோடி ரூபா குறைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செலவினங்களும் இதில் அடங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சர்வ கட்சி மாநாட்டில் புதிய வரவு செலவுத் திட்டம் குறித்து பேசப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ)

# கொழும்புக்கு டில்லியின் உதவியளிப்பு தொடரும்!

## பஸிலிடம் ஜெய்சங்கர் உறுதி

**கொழும்பு, மார்ச் 29**
**"இலங்கைக்கான இந்திய உதவிகள் தொடரும்." - என்று இந்திய வெளிவிவகார அமைச் சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.**



இலங்கையில் நடைபெறும் 'பிம்ஸ்டெக்' மாநாட்டில் பங்கேற்பதற்காக கொழும்பு வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்று முற்பகல் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இலங்கையின் பொருளாதார நிலைமை மற்றும் இந்தியாவின் ஆதரவு தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன என்று தனது டுவிட்டர் பக்கத்தில் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

அயலவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இலங்கைக்கான உதவி தொடரும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நெருக்கடியான கட்டத்தில் இலங்கைக்கு இந்தியா வழங்கிய ஒத்துழைப்புக்கு, நிதி அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார். (அ)

# இரு குழுக்கள் மோதல் இரண்டு பேர் படுகாயம்

கொழும்பு, மார்ச் 29

பதுளை, வெலிகேமுல்லை பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இருவர் படுகாயமடைந்த நிலையில் பதுளை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரின் தலையிலும் பலத்த வெட்டுக்காயங்கள் காணப்பட்டதுடன், அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பதுளை பொது வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.

காயமடைந்த 45 மற்றும் 28 வயதுடைய இருவரது வீடுகளும் வெலிகேமுல்ல கிராமத்தில் அருகருகே அமைந்திருந்துள்ளதோடு, குறித்த தாக்குதல் சம்பவத்திற்காக கோடரி பயன்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. நீண்ட காலமாக இரு தரப் பினருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த மோதல் ஏற்பட் டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# டொலரின் பெறுமதி வீழ்ச்சியடையாது!

## பேராசிரியர் வெளியிட்ட தகவல்

கொழும்பு, மார்ச் 29

நாட்டில் தற்போது வரையில் 300 ரூபாவை எட்டியுள்ள அமெரிக்க டொலரின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடையாது என பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

டொலரின் பெறுமதி 400 ரூபாவை எட்டும் என சிலர் கணித்துள்ளனர் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பிரியங்க துனுசிங்க கூறினார்.

எப்படியிருப்பினும் அடுத்த சில மாதங்களுக்கு டொலரின் பெறுமதி 300 ரூபாய் வரம்பிற்குள்ளேயே இருக்க வாய்ப்புள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மத்திய வங்கி 203 ரூபாயில் வைத்திருந்த டொலர், சந்தை நிர்ணயித்த விலையை தீர்மானிக்க அனுமதித்த பின்னர் சுமார் 300 ரூபாவாக உயரும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் அது இவ்வளவு சீக்கிரம் நடக்கும் என பொருளாதார ஆய்வாளர்கள் எதிர்பார்க்க வில்லை என பேராசிரியர் குறிப்பிட்டார். (அ)

# அதிக வட்டி வீதத்தில் கடன் வாங்க தயாராகும் இலங்கை

கொழும்பு, மார்ச் 29

இலங்கை அபிவிருத்தி பிணை முறிகளை வெளியிட்டு மிக அதிகமான வட்டி வீதத்தில் டொலர்களை கடனாக பெறத் தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கடனை வழங்குவோருக்கு அறிக்கை வழங்கப்பட்டுள்ளதுடன் இலங்கை மத்திய வங்கி இந்த கடனை பெறும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்கான விரிவான பிரசாரங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆறு முதல் 57 மாதங்களில் திருப்பிச் செலுத்தும் வகையில் இந்த கடன் பெறப்படவுள்ளதுடன் எவ்வளவு தொகை கடனாக பெறப்பட உள்ளது என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை.

வட்டி வீதமானது 8.5 வீதம் முதல் 8.95 வீதம் என்ற மட்டத்தில் இருப்பதுடன் மிக குறுகிய காலத்தில் கடனை திருப்பி செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

7, 10,13,22,25, 34,46, 52, 57 மாதங்களில் இந்த கடனை திரும்ப செலுத்த வேண்டும். வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்களிடம் இருந்து இந்த கடனை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (அ)

# போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைது!

திருமலை, மார்ச் 29

திருகோணமலை - சமன்புர பிரதேசத்தில் கட்டுத்துவக்கு மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவரைக் கைது செய்துள்ளதாக சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

சீனக்குடா இரகசியப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து வீடொன்றைச் சோதனையிட்டபோது அனுமதிப்பத்திரம் இன்றி வைத்திருந்த கட்டுதுவக்கு ஒன்றும், 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக சீனக்குடா பொலிஸார் கூறினர்.

சோதனைக்கு உட்படுத்தப்பட்ட வீட்டிலிருந்து 33 வயதுடைய பெண்ணொருவரை சந்தேகத்தின் பெயரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் வழங்கிய வாக்குமூலத்திற்கு அமையக் கைப்பற்றப்பட்ட கட்டுத்துவக்கு மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் அவருடைய தந்தையுடையது என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும் பெண்ணின் தந்தை வீட்டில் இருக்கவில்லை எனவும் வேலை நிமிர்த்தம் கொழும்புக்குச் சென்று இருந்ததாகவும் குறித்த பெண் வாக்குமூலம் அளித்துள்ளார். பெண்ணின் தந்தையை சீனக்குடா பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகுமாறு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் சீனக்குடா பொலிஸார் கூறினர். (அ)

# நாட்டுக்கு ஒரு புதிய ஆரம்பமும் தேசிய மாற்றமும் மிகஅவசியம்

## வலியுறுத்துகின்றார் மல்கம் ரஞ்சித்



கொழும்பு, மார்ச் 29

இலங்கைக்கு ஒரு புதிய ஆரம்பமும் தேசிய மாற்றமும் தேவை என்று கர்தினால் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

இலங்கை, சுதந்திரம் பெற்று 74 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இந்தநிலையில் செழிப்பை நோக்கி இலங்கையர்கள் தேர்ந்தெடுத்த பாதை உண்மையானதா என்ற கேள்விக்கு பதிலளிக்கவேண்டியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்

கொழும்பில் உள்ள கிறிஸ்துவின் வாழும் இரட்சகர் பேராலயத்தில் இடம்பெற்ற ஆராதனையின் பின்னர் அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் இன்றைய நம்பிக்கையற்ற சூழ்நிலையானது, இத்தனை ஆண்டுகளில் அரசியல்வாதிகள் மட்டுமல்ல, குடிமக்களும் செய்த தவறான தேர்வுகளின் விளைவாகும்.

இந்த ஆண்டுகளில், 74 ஆண்டுகளில், ஆசியா நாடுகள் முன்னோக்கி நகர்ந்தபோது இலங்கை நல்லதில் இருந்து கெட்டதை நோக்கி சரிந்துள்ளது.

இதன் காரணமாக நாடு இன்று கடுமையான பொருளாதார மற்றும் சமூக மற்றும் அரசியல் நெருக்கடியில் உள்ளது.

இதற்கு குறுகிய மனப்பான்மையை கொண்ட அரசியல் தேர்வுகளே காரணமாகும்.

இந்த தவறுகள் மற்றும் குறுகிய பார்வையின் விளைவாக இன்று, நமது பொருளாதாரம் மொழி மற்றும் மத வேறுபாடுகளால் சிதைந்து, ஒருவரையொருவர் சந்தேகிக்கக்கூடியவர்களாக உள்ளனர்-என்றார். (அ)

# 18 ஆயிரம் கிலோ தங்கத்தை குறுகிய காலத்தில் விற்ற அரசு

கொழும்பு, மார்ச் 29

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது இலங்கை மத்திய வங்கியின் கையிருப்பில் இருந்த 19 ஆயிரம் கிலோ கிராம் தங்கம் தற்போது ஆயிரம் கிலோ கிராமாக குறைந்துள்ளதாக தெரிய வருகிறது.

தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் 18 ஆயிரம் கிலோ கிராம் தங்கம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அஜித் நிவாட் கப்ரால் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக பதவிக்கு வந்து குறுகிய காலத்தில் 5 ஆயிரம் கிலோ கிராம் தங்கம் விற்பனை செய்யப்பட்டுள்ளது என இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் கலாநிதி டப்ளியூ.ஏ. விஜேவர்தன தெரிவித்தார்.

தங்கத்தை விற்பனை செய்த போது ஒரு அவுன்ஸ் தங்கத்தை ஆயிரத்து 600 டொலர்களுக்கு விற்பனை செய்துள்ளனர். இந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்ட தினத்திற்கு அண்மைய தினத்தில் உலக சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கம் ஆயிரத்து 700 டொலர் என்ற வீதத்தில் அதிகரித்து காணப்பட்டது எனவும் விஜேவர்தன கூறினார். (அ)

# குழந்தைகள் தண்ணீரில் விளையாட அதிகளவான நேரத்தை வழங்குங்கள்

கொழும்பு, மார்ச் 29

தற்போது நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக சிறுவர்கள் மருத்துவ சிகிச்சையை நாடும் போக்கு காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

குழந்தைகளுக்கு காய்ச்சல் நீர்ச்சத்து குறைய வாய்ப்புள்ளதால், அதிகளவில் தண்ணீர் குடிக்க வைக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

குளிப்பதைக் கட்டுப்படுத்துவதால் வியர்வை கொப்புளங்கள் அதிகரிக்கலாம் எனவும் அதனால் இருமல், சளி எதுவாக இருந்தாலும் குழந்தைகளைக் குளிப்பாட்டுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறிப்பாக, குழந்தைகளுக்கு தண்ணீரில் விளையாட அதிக நேரம் கொடுக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# மாலைதீவில் இந்தியா எதிர்ப்பு பிரச்சாரத்தின் பின்னணி என்ன?

நிருபமா சுப்பிரமணியம்




மார்ச் 23 அன்று, மாலைதீவு பாராளுமன்றம் இரண்டு நாட்களுக்குப் பின்னர் தலைநகர் மாலேயில் திட்டமிடப்பட்ட எதிர்க் கட்சி பேரணியை அனுமதிக்காத அவசர காலப் பிரேரணையை ஏற்றுக்கொண்டது. இந்த பேரணி முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யாமீன் மற்றும் அவரது முற்போக்கு கட்சி மற்றும் அதன் கூட்டணி கட்சியான மக்கள் தேசிய காங்கிரஸால் நடத்த திட்டமிடப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீதின் மாலைதீவு ஜனநாயகக் கட்சியின் (எம்.டி.பி) உறுப்பினர் அப்துல்லா ஜாபிரால் அவசரகால பிரேரணை முன்மொழியப்பட்டது. இந்த பேரணி தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிப்பதாகவும், மாலைதீவுக்கும் அதன் அண்டை நாடுகளுக்கும் இடையே முரண்பாடுகளை விதைப்பதாகவும் பிரேரணை கூறியது. பேரணி மற்றும் பிற நிகழ்வுகளை நிறுத்துமாறு மாலைதீவு அரசு தேசிய பாதுகாப்புப் படைகளைக் கேட்டுக் கொண்டது.

பேரணியின் கருப்பொருள் "இந்தியா அவுட்" என்பது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஜனாதிபதி இப்ராஹிம் சோலிஹ் தலைமையிலான MDP அரசாங்கம் மாலைதீவை இந்தியாவிற்கு "விற்றுவிட்டதாக" எதிர்ப்பாளர்களால் உருவாக்கப்பட்டது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் மாலத்தீவிற்கு வருவதற்கு ஒரு நாள் முன்னதாக, போராட்டம் நடத்த அனுமதிக்கப்படவில்லை, நாட்டின் பிற பகுதிகளில் இருந்து மாலேயில் நடந்த நிகழ்ச்சிக்கு பயணித்த பேரணியாளர்கள் மீது போலீசார் தடியடி நடத்தினர்.

**மாலத்தீவின் அரசியல் சூழல்**

2005 இல் ஜனநாயகத்தை பெற்ற சுமார் 500,000 மக்களைக் கொண்ட ஒரு சிறிய நாடு மாலைதீவு, அது இந்தியப் பெருங்கடலின் வியூக பகுதியில் அமைந்துள்ளது, மாலைதீவு கடந்த தசாப்தத்தில் அல்லது அதற்கும் மேலான காலகட்டத்தில் பிராந்தியத்தின் புவிசார் அரசியல் மாற்றங்களால் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த 10 ஆண்டுகளாக மாலைதீவில் செல்வாக்கு பெற இந்தியாவும் சீனாவும் போட்டியிட்டன. இஸ்லாம் அரச மதமாக இருக்கும் நாட்டில் இஸ்லாமியர்களின் அரசியல் போட்டி கடுமையாக உள்ளது. இத்தனைக்கும், ஜனநாயகம் கொண்டு வந்த அரசியல் ஏற்ற தாழ்வுகளையும் நாடு அனுபவித்து வருகிறது.

நெருங்கிய பெரிய அண்டை நாடாக, இந்தியா அனைத்து துறைகளிலும் பல தசாப்தங்களாக மாலைதீவின் முதல் உதவுபவராக இருந்து வருகிறது, வலுவான முன்னாள் ஜனாதிபதி மௌமூன் அப்துல் கயூம், 20 ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகள் வரை நாட்டின் சவாலற்ற ஆட்சியாளராக இந்த உறவை உறுதிப்படுத்தினார். அந்த நேரத்தில் ஒரு பரபரப்பான தெற்காசிய தருணத்தில், ஜனாதிபதி கயூமை துப்பாக்கி சூடு மூலம் கொல்ல, இலங்கை தமிழ் போராளிக் குழு ஒன்றை ஏற்பாடு செய்த, ஒரு தொழிலதிபரின் சதித்திட்டத்தை இந்தியாவின் தேசிய பாதுகாப்புப் படை முறியடித்தது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக, அரசியல் கட்சிகள் பதவியை வெல்வதற்காக தேர்தலில் போட்டியிட்டதால், சிறிய நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வெளியுறவுக் கொள்கைகள் ஒரு பெரிய பங்கைக் கொண்டுள்ளன. இந்த காலகட்டம் சீனாவின் எழுச்சி மற்றும் பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் அதன் அதிகாரத்தின் கணிப்புடன் ஒத்துப்போனது.

சீனா இந்தியப் பெருங்கடலின் ஒரு பகுதியாக இருந்தாலும், இந்தியா முதன்மையான சக்தியாக இருந்ததால், இலங்கை மற்றும் மாலத்தீவுகளின் தேசிய அரசியலில் புவிசார் அரசியல் போட்டி இருப்பதை உணர்ந்தது. மாலத்தீவில், எம்.டி.பி. மற்றும் அதன் உயர்மட்ட தலைவர்கள், குறிப்பாக நஷீத், இந்தியா சார்புடையவர்களாகக் காணப்படுகின்றனர், அதே சமயம் போட்டியாளரான யாமீன் சீனாவின் ஆதரவாளராகக் காணப்படுகிறார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் எம்.டி.பி. மீண்டும் ஆட்சிக்கு வந்தது. யாமீன் அரசாங்கத்தின் கீழ் தண்டனை விதிக்கப்பட்டதால் நஷீத் போட்டியிட முடியவில்லை, மேலும் இப்ராஹிம் சோலிஹ் ஜனாதிபதியானார். விரைவில் ஊழல் குற்றச்சாட்டில் யாமீன் தண்டிக்கப்பட்டார்.

மாலேயில் ஒரு நட்பு அரசாங்கம் அமைந்ததால், யாமீன் ஜனாதிபதியாக இருந்த ஆறு வருட இடைவெளிக்குப் பிறகு, இருதரப்பு உறவுகளை இந்தியா மீண்டும் கட்டியெழுப்பவும், அதன் முந்தைய செல்வாக்கில் சிலவற்றை மீட்டெடுக்கவும் இந்தியாவால் முடிந்தது. முந்தைய அரசாங்கத்தில் இந்தியா - மாலைதீவு உறவுகள் மிகக் குறைந்த நிலைக்குத் தள்ளப்பட்டன.

மாலைதீவு உச்ச நீதிமன்றம் யாமீனின் தண்டனையை ரத்து செய்த பின்னர், நீண்ட வீட்டுக் காவலில் இருந்து 2021 டிசெம்பரில் யாமீன் விடுதலையானது, இந்தியாவுக்கு எதிரான பேரணிகளின் ஆடுகளத்தையும் அதிர்வெண்ணையும் உடனடியாக அதிகரிக்க வழிவகுத்தது. கயூமின் ஒன்றுவிட்ட சகோதரராரும் அரசியல்வாதியுமான யாமீனின் சுவரொட்டிகளை எதிர்ப்பாளர்கள் ஏந்திச் செல்கின்றனர். இந்தப் போராட்டத் தளங்களில் சிலவற்றில் யாமீன் கலந்து கொண்டார், மேலும் சில பேரணிகளுக்கு தலைமை தாங்கினார்.

அடுத்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் 2024 இல் நடைபெறவுள்ளன, மேலும் MDP யை இந்தியாவிற்கு அடிமைப்படுத்திய கட்சி என்று சாயம் பூசுவதன் மூலம் யாமீன் தனது ஆதரவு தளத்தை உயர்த்த பிரச்சாரத்தைப் பயன்படுத்துகிறார்.

**"இந்தியா அவுட்" போராட்டம்**

"இந்தியா அவுட்" எதிர்ப்பானது, சோலிஹ் அரசாங்கத்தின் இந்திய நட்புக் கொள்கைகளுக்கு எதிராக ஒரு பொது எதிர்ப்பாகத் தொடங்கியது, இப்போது இந்தியா ஒரு பெரிய இராணுவக் குழுவை மாலைதீவுக்கு அனுப்பியுள்ளது என்ற குற்றச்சாட்டாக மாறியுள்ளது, இதனை சோலிஹ் அரசாங்கம் பலமுறை மறுத்துள்ளது.

மாலைதீவு கடலோரக் காவல்படைக்காக உதுரு திலாஃபல்ஹூ (UTF) அட்டோலில் துறைமுகத்தை உருவாக்க இரு தரப்புக்கும் இடையே உள்ள ஒத்துழைப்பில் குறிப்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கண்காணிப்பு மற்றும் மீட்பு மற்றும் விமான ஆம்புலன்ஸ் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் மூன்று டோர்னியர் விமானங்களை இயக்கும் பராமரிப்பு மற்றும் விமானக் குழுவினரைத் தவிர, மாலைதீவில் இந்திய இராணுவ வீரர்கள் யாரும் இல்லை என்று சோலிஹ் அரசாங்கம் கூறியுள்ளது.

மாலைதீவு பாதுகாப்பு அமைச்சகம் மார்ச் 13 அன்று ஒரு அறிக்கையில், மாலைதீவு கடலோர காவல்படைக்கான கப்பல்துறையாக உருவாக்கப்பட்டு வரும் யு.ரி.எப். இல் வெளிநாட்டு இராணுவ வீரர்கள் யாரும் இல்லை என்று கூறியது. "யு.ரி.எப். ஒரு வெளிநாட்டு இரா ணுவ தளம் என்று கூறப்படும் அறிக் கைகள் பொய்யானவை" என்று பாதுகாப்பு அமைச்சகம் கூறியது.

**இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு**

பெப்ரவரி 2021 இல், ஜெய்சங்கரின் வருகையின் போது, யு.ரி.எப். துறைமுகத்தை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும் மாலைதீவுகளும் கையெழுத்திட்டன. இந்த திட்டம் "மாலைதீவு கடலோர காவல்படையின் திறனை பலப்படுத்தும்" என்று அந்த நேரத்தில் மத்திய அமைச்சர் ருவீட் செய்திருந்தார் மற்றும் இரு நாடுகளையும் "வளர்ச்சியில் பங்குதாரர்கள் மற்றும் பாதுகாப்பில் கூட்டணி நாடுகள்" என்று விவரித்தார். அதே பயணத்தின் போது, இந்தியா 50 மில்லியன் டாலர் பாதுகாப்புக் கொள்முதல் கடனை மாலத்தீவுக்கு வழங்கியது.

பாதுகாப்பு கடன் சலுகையானது "கடற்பரப்பில் திறனைக் கட்டமைக்க உதவும்" என்று ஜெய்சங்கர் அப்போது கூறியிருந்தார். பிராந்திய கடல் பாதுகாப்பை மேம்படுத்துவதில் ஒருங்கிணைப்பை வலுப்படுத்தவும், பயங்கரவாதத்தை "அதன் அனைத்து வடிவங்களிலும் வெளிப்பாடுகளிலும்" எதிர்த்துப் போராடுவதில் கவனம் செலுத்துவதற்கும் இரு தரப்பும் ஒப்புக்கொண்டதாக ஒரு கூட்டு அறிக்கை கூறியது.

மாலைதீவானது, இந்தியாவால் இயக்கப்படும் இந்தியப் பெருங்கடல் சிறு-பக்க கொழும்பு பாதுகாப்பு மாநாட்டின் ஒரு பகுதியாக உள்ளது. இதில் மற்ற உறுப்பினர்களாக இலங்கை மற்றும் புதிதாக அனுமதிக்கப்பட்ட மொரிஷியஸ் உள்ளனர். பங்களாதேஷ் மற்றும் சீஷெல்ஸ் விரைவில் இணையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா தன்னை நிகர பாதுகாப்பு வழங்குனராகக் கருதும் பிராந்தியத்தில் "பகிரப்பட்ட பாதுகாப்பு நோக்கங்களை" அடிக்கோடிட்டுக் காட்ட இந்த நாடுகளின் தேசிய பாதுகாப்பு பிரிவுகள் மார்ச் மாதத்தின் தொடக்கத்தில் மாலேயில் சந்தித்தனர். கடந்த நவம்பரில், இந்திய கடற்படை, மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படை மற்றும் இலங்கை கடற்படை ஆகியவை தெற்கு அரபிக்கடலில் உள்ள மூன்று நாடுகளின் பிரத்தியேக பொருளாதார மண்டலங்களில் இரண்டு நாள் பயிற்சியை மேற்கொண்டன.

"ஃபோகஸ்டு ஆபரேஷன்" என்ற குறியீட்டுப் பெயரிடப்பட்ட இது, மூன்று நாடுகளின் முன்னணி கடல்சார் பாதுகாப்பு நிறுவனங்களுக்கிடையில் "புரிந்துகொள்ளுதல் மற்றும் இயங்கக் கூடிய தன்மையை உருவாக்குவதை" இலக்காகக் கொண்டு என்று நடவடிக்கையின் அதிகாரப்பூர்வ வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவுகள் 2020 இல் அமெரிக்காவுடன் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. கடந்த மாதம், மாலைதீவில் அமெரிக்க தூதரகத்தை திறக்க அனுமதிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன, அமெரிக்கா, மாலைதீவில் தூதரகத்தை திறக்கும் முதல் மேற்கத்திய நாடு ஆகும். தற்சமயம், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மாலைதீவின் தூதுவராகவும் செயல்படுவார்.

**மாலத்தீவில் உள்நாட்டு அரசியல்**

யாமீன், மாலைதீவு தேசியவாதத்தைப் பயன்படுத்தி, இந்திய-விரோத பிரச்னையை மையமாக கொண்டு மீண்டும் ஆட்சிக்கு வருவார் என்று நம்புகிறார், அதன் அனைத்துத் தேவைகளையும் இறக்குமதி செய்யும் நாடு, உணவுப் பாதுகாப்பு உட்பட அதன் பாதுகாப்பிற்காக இந்தியாவைச் சார்ந்துள்ளது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுவதன் மூலம் அரசாங்கம் இதை எதிர்கொண்டது.

அதேநேரம் எம்.எ.பி. "இந்தியா முதலில்" பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது, மேலும் இந்திய எதிர்ப்புப் போராட்டங்களை தேசவிரோதமாக குற்றப்படுத்துவதற்கான சட்டத்தையும் உருவாக்கியுள்ளது. சட்டம் கைவிடப்பட்டது, ஆனால் அதன் பின்னணியில் உள்ள உணர்வு கடந்த வாரம் மாலேயில் நடந்த "இந்தியா அவுட்" போராட்டத்தை தடை செய்ய வழிவகுத்தது.

ஜனாதிபதி சோலிக்கும் நஷீத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை அரசியல் ரீதியாகப் பயன்படுத்தவும் யாமீன் முனைகிறார். இந்த வேறுபாடுகள் அரசாங்கத்தின் செயல்பாடுகளில் வராமல் இருக்க இருவரும் பெருமளவில் சமாளித்தனர், ஆனால் கடந்த ஆண்டு உள்ளூர் இஸ்லாமியக் குழுவினால் நடத்தப்பட்ட நஷீத் மீதான படுகொலை முயற்சியில், அத்தகைய சக்திகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்காததற்காக முன்னாள் ஜனாதிபதி அரசாங்கத்திற்கு எதிராக பகிரங்கமாக குறை கூறினார். உள்ளாட்சித் தேர்தலில் எம்.டி.பி.யின் தோல்வியால் கருத்து வேறுபாடு கள் வெளிப்படையாக வெளிப்பட்டன. பாராளுமன்றத்தில் MDP யின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பயன்படுத்தி மாலத்தீவை ஜனாதிபதி பதவியில் இருந்து, ஒரு பிரதமர் அரசாங் கத்திற்கு தலைமை தாங்கும் பதவிக்கு மாற்ற வேண்டும் என்று நஷீத் விரும்புகிறார்.

- இந்தியன் எக்ஸ்பிரஸ்



**பேச்சுக்களுக்கு அரசாங்கம் இணங்கியதற்கு பின்னால் வலுவான சக்திகளின் நடவடிக்கை முதன்மையானதாக அமைந்திருந்தது. அதாவது அமெரிக்க இராஜ தந்திரிகளது இலங்கை வருகை மறுபக்கத்தில் இந்தியாவின் நிதி உதவியும் தமிழர் பற்றிய இந்தியாவின் ஜெனீவா வரையான நிலைப்பாடும் முக்கியமானதாகவே தெரிகிறது.**

பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்

# ஜனாதிபதி – கூட்டமைப்பு சந்திப்பு தேசிய பிரச்சினைக்கு தீர்வு தருமா?

ஈழத்தமிழர் அரசியல் விவகாரம் இலங்கைத் தீவக்குள் தீர்வை எட்டுவதற்காக மீண்டும் ஓர் உரையாடலுக்கு வழிவகுத்துள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்புடனான இலங்கை ஜனாதிபதியின் பேச்சுவார்த்தை 25.03.2022 முதல் கட்டத்தை எட்டியுள்ளது.

மிக நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்ட பேச்சுக்கான வாய்ப்பானது தற்போதே கைகூடியுள்ளதாக இரு தரப்பும் சந்தித்த போது பரிமாற்றியுள்ளனர். தமிழர் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழரசுக் கட்சியின் தலைவரும் கலந்து கொண்டதுடன் ஜனாதிபதி பிரதமர் உட்பட வெளிவிவகார அமைச்சர் நீதி அமைச்சருடன் சமல் ராஜபக்ஷவும் அரச தரப்பு பிரதிநிதிகளாக கலந்து கொண்டனர். தமிழர் தரப்பில் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதாகவும் அது பற்றிய முடிவுகளை அடுத்த இரு மாதங்களில் வழங்குவதாகவும் அதன் பின்பு அடுத்த கட்டப் பேச்சுக்கள் நிகழும் எனவும் தமிழர் தரப்பில் வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கட்டுரையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னணியையும் அதனூடாக மேற்கொள்ள வேண்டிய உத்திகளையும் தேடுவதாக அமையவுள்ளது.

முதலாவது பேச்சுக்கள் இராஜதந்திரத்தின் ஒரு செய்முறை என்பதை புரிந்து கொள்ளுதல் வேண்டும். அதிலும் இலங்கை ஆட்சியாளர்களுடன் கடந்த காலத்தில் நிகழ்த்திய பேச்சுவார்த்தைகள் அனைத்துமே தந்திரோபாயமாகவே அரச தரப்பால் கையாளப்பட்டதென்ற அனுபவத்தை கொண்டது. அதிலும் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மகிந்த ராஜபக்ஷவுடன் 11 தடவைக்கு மேல் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பேசிய போது எந்தவித முடிவுமின்றி ஏமாற்றப்பட்ட அனுபவம் முக்கியமானது. அத்தகைய ஏமாற்றுத்தனமும் பேச்சுக்கான இழுபறியும் நிகழ்ந்த பின்பும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தைக்கு சென்றதற்கான காரணம் முக்கியமானது.

அவ்வாறே இந்தியாவின் அழைப்புக்கு பல விளங்கங்களை வெளிப்படுத்துவதைத் தவிர்த்துக் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை ஜனாதிபதியுடனான பேச்சுக்களில் அதிக உணர்ச்சிவசப்பட்டு மேசையில் அடித்துப் பேசியதாக செய்திகள் வெளியாகியுள்ளது. அது மட்டுமன்றி 13 திருத்தத்தைக் கூட முழுமையாக அமுல்படுத்த முடியாதுவிட்டால் நாம் எமது வழியில் செல்வோம் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார். பேச்சுகளில் உணர்ச்சிகளை விட தந்திரமும் உத்தியுமே அவசியமானது. அவரது முதலாவது செயலைவிட இரண்டாவது வெளிப்படுத்துகை அதிக கருத்து நிலை சார்ந்தது.

இரண்டாவது பேச்சுக்களுக்கு அரசாங்கம் இணங்கியதற்கு பின்னால் வலுவான சக்திகளின் நடவடிக்கை முதன்மையானதாக அமைந்திருந்தது. அதாவது அமெரிக்க இராஜதந்திரிகளது இலங்கை வருகை மறுபக்கத்தில் இந்தியாவின் நிதி உதவியும் தமிழர் பற்றிய இந்தியாவின் ஜெனீவா வரையான நிலைப்பாடும் முக்கியமானதாகவே தெரிகிறது. தமிழர் விடயத்தை ஏற்றுகொள்ளாது நிராகரிப்பினை அரசாங்கம் பின்பற்றுமாக அமைந்தால் பாரிய நெருக்கடியை இலங்கைத் தீவுக்கு ஏற்படுத்திவிடுமா என்ற குழப்பம் அரசாங்கத்திற்கு உண்டு. இந்தியாவும் அமெரிக்காவும் ஈழத்தமிழருக்கு எதுவும் செய்யாத போது ஏதும் நிகழ்ந்துவிடும் என இலங்கை ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். அதனால் இன்றைய சூழலை எதிர்கொள்ள வேண்டுமாயின் கூட்டமைப்புடனான பேச்சுக்கள் அவசியமானவையாக உள்ளன.

அதில் நேரடியாக இந்தியாவையும் அமெரிக்காவையும் திருப்திப்படுத்துவதுடன் புலம் பெயர்ந்தவர்களது முதலீட்டுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் பெயரில் அந்த நாடுகளை திருப்திப்படுத்துவதாகவே பேச்சுக்களை அரசாங்கம் திட்டமிடுள்ளது. மேலும் புலம்பெயர் அமைப்புக்களை கையாளவும் இத்தகைய சூழலை பயன்படுத்திக் கொள்ள அரசாங்கம் முயலுவதனைக் காணமுடிகிறது. காரணம் ஈழத்தமிழரது அரசியல் இருப்பினை பாதுகாப்பவர்களாகவும் தொடர்ந்து முன்னெடுப்பவராகவும் புலம்பெயர்ந்தவர்களே காணப்படுகின்றனர். அதனால் அவர்களை கையாளுவதற்கான நகர்வுகளை ஆட்சியாளர்கள் கொண்டுள்ளனர் என்பதை கவனத்தில் கொள்வது அவசியமானது.

மூன்றாவது தமிழ் தரப்பானது காணாமல் போனோர், காணி ஆக்கிரமிப்பு, அரசியல் கைதிகள் பற்றி விடங்களை உரையாடியதுடன் அதற்கான கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். இவை ஒரு ஆரோக்கியமான நகர்வாக அமைந்தாலும் நடைமுறைச்சாத்தியமான நிலையை உறுதிப்படுத்தக் கூடிய தரப்பினை பேச்சுக்களில் ஈடுபடுத்தியிருக்க வேண்டும். நிச்சயமாக இத்தகைய சூழலில் பொறுப்புக் கூறுவதற்கான தரப்புக்களை பிராந்திய சர்வதேச மட்டத்தில் உள்ள நிறுவனங்களை அழைத்திருக்க வேண்டும். காரணம் இதே போன்று பல பேச்சுக்களும் அதன்பின்பான விளைவுகளையும் ஈழத்தமிழ் அரசியல் வாதிகளும் ஈழத்தமிழர்களும் கண்டுகொண்டவர்கள் என்பது நினைவு கூரத் தக்கது.

குறிப்பாக காணி ஆக்கிரமிப்பு தொடர்பில் ஜனாதிபதியின் உறுதி மொழிக்கு அப்பால் அது பற்றி ஜனாதிபதி எழுப்பிய கேள்விகளே பேச்சுக்களின் எதிர்காலம் எப்படியானதாக அமையும் என்பதை கட்டியம் கூறி நிற்கிறது. அவற்றுக்கு எந்தப்பதிலும் மறுப்பும் வெளிப்படுத்தாத கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களது நிலையே அதிகமான குழப்பத்தை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. அதனையும் கடந்த அவ்விடயத்தை அப்படியே ஊடக வெளியில் விமர்சனம் எதுவும் இன்றி உரையாடுவதென்பது அதனையும் விட மோசமானதாகவே ஈழத்தமிழர் ஒவ்வொருவரும் கருதுகின்றனர்.

நான்காவது அடுத்த கட்ட பேச்சுக்களின் போது அரசியல் தீர்வு பற்றி உரையாடப் போவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். அவ்வாறாயின் நிச்சயமாக மூன்றாம் தரப்பின் அவசியப்பாடு தேவையானதாகவே உள்ளது. குறிப்பாக இந்தியாவும் அமெரிக்காவும் தமிழர் விடயத்தில் சில அழுத்தங்களை கொடுப்பவர்களாக இருப்பதனால் அத்தரப்பை கோருவதென்பது அரசாங்கத்திற்கும் தமிழ் தரப்பிற்கும் ஆரோக்கியமானதாக அமையும். இலங்கை ஆட்சியாளரின் நகர்வுகளை ஏற்கனவே புரிந்து கொண்ட தமிழ் அரசியல்வாதிகள் அதனை கையாளவும் பேச்சுக்களை நிதானமக நகர்த்தவும் தயாராக வேண்டும். பேச்சுவார்த்தைக்கு பின்னால் அமெரிக்க இந்திய சக்திகளின் நிகழ்ச்சி நிரல் இருப்பதாக எதிர்தரப்புக் கூறுவதனை தமிழ் தரப்பு சாதகமான விடயமாகக் கருத வேண்டும். அதற்கான முனைப்புடன் பேச்சுக்களை தொடரவும் அதற்கான நடவடிக்கைகளை இரு நாட்டின் ஈடுபாட்டுடனும் மேற்கொள்ள முனைவது அவசியமானது.

ஐந்தாவது பேச்சுக்களை தென் இலங்கை ஆட்சியாளர்கள் தந்திரமாக கையாள்வது அவர்களது மரபான அரசியல் நகர்வாகும். இதனால் காலம் தாழ்த்துவது பிற்போடுவது போன்ற இழுத்தடிப்புகளை முதன்மைப்படுத்துவார்கள். அவ்வகை அனுபவங்களே தமிழ் மக்களது அரசியலில் கடந்த காலம் முழுவதும் காணக்கூடிய விடயமாக அமைந்திருந்தது. இதனால் தமிழ் தரப்பு பேச்சுவார்தைக் காலத்தை தெளிவாக வரையறுத்துக் கொள்வது அதற்கான அட்டவணையை வரையறுப்பது என்பன உடனடி அவசியமான விடயங்களாக கொள்ளப்படுதல் வேண்டும். குறித்த காலப்பகுதிக்குள் பேச்சுக்கள் நிறைவு பெறவும் அதில் அரசியல் தீர்வின் முடிவையும் கவனத்தில் கொள்வது அவசியமானது.

ஆறாவது அரசியல் தீர்வு விடயத்தில் தமிழரசுக் கட்சியினதும் ஏனைய புதிய பழைய தேசிய அணிகளின் கோரிக்கைகளும் பிரகடனங்களுமாக சமஷ்டி காணப்படுகிறது. அதன் வளர்ச்சிக் கட்டங்கள் அதிகமாக உலகளாவிய அனுபவங்களாக உள்ளன. அவற்றை முன்வைப்பதுவும் அது பற்றிய உரையாடலை மேலெழச் செய்வதும் தற்போதைய தேவையாக உள்ளது. குறைந்த பட்சம் இன்றை சூழலைப் பயன்படுத்திக் கொண்டு உச்சளவான கோரிக்கையை முன்வைப்பது அவசியமான உரையாடலாக உள்ளது. பிராந்திய சர்வதேச சக்திகளது நகர்வை கவனத்தில் கொள்ள வேண்டும். உக்ரையின் போர் நிமித்தம் ரஷ்சிய இந்திய நெருக்கம் அதில் சீனாவின் புரிதல் என்பன குவாட் கூட்டமைப்பினை பலவீனப்படுத்தியுள்ளது. அதனை சரிசெய்ய வேண்டிய சூழலுக்குள் அமெரிக்காவும் குவாட் நாடுகளும் காணப்படுகின்றன. அத்தகைய சூழலையும் தமிழ் தரப்பு கவனம் கொள்வது அவசியமானது. அதே நேரம் இலங்கைத் தீவின் பொருளாததார நெருக்கடி மறுபக்கத்தில் அரசியல் நெருக்கடி இரண்டுமே இலங்கை ஆட்சியாளர்களை பாதித்துள்ளது. எனவே இச்சூழல் தமிழருக்கான வாய்ப்பினை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்துள்ளது. அதனை தமிழ் தரப்பே கவனம் கொள்ள வேண்டும். ஏனைய தரப்புக்கள் தமது நலனுக்கு உட்பட்டே செயல்படுத்துவன. அதனால் அதிக முக்கியத்துவம் உள்ள காலப் பகுதியாகவே தமிழரது அரசியல் உள்ளது.

ஏழாவது வடக்குக் கிழக்கை மீளக்கட்டியெழுப்புவதற்கான நிதியம் தொடர்பிலான உத்தரவாதத்தை சர்வதேச மட்டத்திலான நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்க வேண்டும். அமெரிக்காவின் வற்புறுத்திலில் பேச்சுக்களை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளதை தமிழ் தரப்புப் புரிந்து கொண்டு அமெரிக்காவினதும் சர்வதேச நிறுவனங்களதும் ஒத்துழைப்பினை நாடுதல் வேண்டும். அவற்றின் அனுசரணையுடன் வடக்கு கிழக்குக்கான நிதியம் ஸ்தாபிப்பதே ஆரோக்கியமான செய்முறையாகும். சிரான் அமைப்பினதும் முன்னாள் வடக்கு மாகாணசபை முதலமைச்சர் நிதியம் தொடர்பிலான அனுபவத்தை தமிழ் தரப்பு முதன்மைப்படுத்த வேண்டும். அத்தகைய அனுபவம் மிக அவசியமானதாகவே காணப்படுகிறது.

எனவே எதுவும் வழங்கக் கூடாது என்பதற்காகவே இலங்கை ஆட்சியாளர்கள் பேச்சுவார்த்தைகளை தொடக்குவது என்ற பலவவீனமான முன் அனுபவத்தைக் கொண்டு தற்போதைய பேச்சுவார்த்தை அணுகப்பட வேண்டும். திட்டமிட்டு உத்திகளை வகுத்து விமர்சனங்களை ஏற்றுக் கொண்டு அதற்கு அமைவாக பேச்சுவார்த்தைகளை எதிர்கொள்வதே அவசியமான செய்முறையாகும். காணி தொடர்பில் ஜனாதிபதியின் வெளிப்படுத்திய உச்சரிப்பு பேச்சுக்கள் எந்த விளைவையும் தமிழ் தரப்புக்கு தராது என்பதைக் காட்டுகிறது. அதற்கு ஏற்றவகையிலேயே தமிழ் தரப்பின் நகர்வுகளும் தென்படுகிறது. எனவே அடுத்த கட்ட உரையாடலுக்கு தயாராக வேண்டும் என்பதும் அதற்கான தகவல்கள் திரட்டப்படுவதுடன் அதனை ஆதாரப்படுத்தும் பணிகளும் முக்கியமானவையாகவுள்ளன. அரசியல் தீர்வு பொறுத்து உரையாடும் போது இந்தியா அமெரிக்கா போன்ற நாடுகளின் பிரசன்னமும் ஒத்துழைப்பும் தவிர்க்க முடியாதது என்பதை தமிழ் தரப்பு உணர்ந்து செயல்பட வேண்டும். மூன்றாம் தரப்பின் பிரசன்னமே பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்த வழிவகுக்கும்.

- அருவி

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

09) **பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை .............................. (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

10) **தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : ...............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .................................................... (2 புள்ளிகள்)

11) **கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ............................ ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

12) **தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  .................................

ii)  .................................

(2 புள்ளிகள்)

13) **பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? /What / you : ...........................................................................

ii) old / How / you? /are : ........................................................................ (2 புள்ளிகள்)

14) **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ...............................................................

ii) தொளஹ : ........................................................ (02 புள்ளிகள்)

15) **பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ........................................................................................

ii) அங்கே பாருங்கள் : ........................................................................................ (02 புள்ளிகள்)


❖ **விடை எழுதுக.**

16) | 7 | 8 |
| 3 | 0 |

இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

...............................................................

17) ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

............................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , .............. , ............ ii) 18 , 15 , 12 , .............. , ............

21) [ 3, 9, 14, 6, 10, 12, ] பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

...................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.......................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

.................................................................

## விடைகள்

09. 1) மடமட 2) தக தக
10. 1) ஊதாரி 2) விமானி / வலவன்
11. 1) பாண் 2) முகில்
12. 1) Star 2) Table
13. 1) What do you like? 2) How old are you?
14. 1) வைத்தியசாலை 2) பன்னிரண்டு
15. 1) பத் கன்ன 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பல
16. 8 730
17. 7 309
18. 1) 6 2) 8
19. $\frac{3}{10}$
20. 1) 128, 130 2) 9, 6
21. 3, 6, 9, 12
22. 745
23. 455

---

கல்வி tv CHANNEL-1

**29.03.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**29.03.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# 2021 புலமைப்பரிசில் பரீட்சையில் மட்டக்களப்பு வலயம் 2ஆம் இடம்!

*மட்டக்களப்பு, மார்ச் 29*



இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அகில இலங்கை ரீதியான தரம் ஐந்து 2021ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பகுப்பாய்வுகளின் படி மட்டக்களப்பு கல்வி வலயம் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்ற அடிப்படையில் இலங்கையில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளதாக மட்டக்களப்பு வலய கல்வி பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வலய கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2021ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்த நிலையில் அதனைத் தொடர்ந்து இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அகில இலங்கை ரீதியான தரம் ஐந்து 2021 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பகுப்பாய்வுகளின் படி மட்டக்களப்பு கல்வி வலயம் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்ற அடிப்படையில் இலங்கையில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. இலங்கையிலுள்ள 100 கல்வி வலயங்களுள் மட்டக்களப்பு கல்வி வலயம் 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் இருந்து 2050 பிள்ளைகள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள். இவர்களுள் 449 பிள்ளைகள் வெட்டுப் புள் ளிக்குமேல் சித்தியைப் பெற்றிருக்கின்றார்கள். 2020ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 433 மாணவர்கள் வெட்டுப் பள்ளிக்கு மேல் சித்தி பெற்று அகில இலங்கை ரீதியில் எமமது வலயம் ஐந்தாம் இடத்தில் இருந்தது. தற்போது 2ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளோம்.

அதேபோல் சித்தி பெறுதல் என்ற அடிப்படையில் எமது கல்வி வலயம் இலங்கையில் 26ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. இது 2020ஆம் ஆண்டு பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் முன்னேற்றகரமாக இருக்கிறது. 2020ஆம் ஆண்டு சித்தி பெற்ற மாணவர்களின் அடிப்படையில் 57ஆம் இடத்தில் இருந்தோம் தற்போது 26ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளோம்.

2020, 2021ஆம் ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட கோவிட் அசாதாரண சூழ்நிலையில் தரம் 4, 5 மாணவர்களின் வகுப்புகள் முழுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையிலும் ஏனைய வலயங்களையும் விட எமது வலய மாணவர்கள் மிகவும் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றிருக்கின்றார்கள்.

இதற்காகப் பாடுபட்ட எமது கல்வி வலயத்தின் அதிபர்கள், இடர் நிறைந்த காலத்திலும் இவர்களை நேரடியாகவும், தொழில்நுட்பத்தினூடாகவும் கற்பித்த ஆசிரியர்கள், குறிப்பாக எமது கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆரம்பப் பிரிவிற்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அவருடன் இணைந்த ஆரம்பப் பிரிவு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆகிய அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கை ஆசிரியர் சங்கம் மட்டக்களப்பு கல்வி வலயம் தொடர்பில் குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்காகவே பத்திரிகையாளர் சந்திப்புகளை நடத்துவதை நான் அவதானித்திருக்கின்றேன். எத்தவிதமான புள்ளி விவரங்களுமின்றியே இவ்வாறான குற்றச்சாட்டுகள் அவர்களால் முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளில் மிகவும் முன்னேற்றகரமான சித்திகள் கிடைக்கப்பெறுகின்றன.

இருப்பினும் உயர்தரத்தில் சில பாடத்துறைகளில் சற்றுப் பின்னடைவு இடர் காலத்தில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் விடுபட்ட காலத்தில் ஏற்பட்டது. அதற்கான வேலைத்திட்டங்கள் அனைத்தும் நடைபெற்றிருக்கின்றது. நிச்சயமாக 2021ஆம் ஆண்டுக்கான பெறுபேறுகள் வெளிவர இருக்கின்றது. அது அதிகரிக்கின்ற நிலையையே காண்பிக்கக்கூடியதாக இருக்கும்.

கோவிட் நிலைமைகளின் பின்னர் தற்போது ஒருவாறான சீரான நிலைமை வந்து கொண்டிருக்கின்றது. இதன்போது மாணவர்களுக்கு நாங்கள் பயிற்சிப் பரீட்சைகளை நடத்தி வருகின்றோம். குறிப்பாக 2021ஆம் ஆண்டுக்கான சாதாரணதரப் பரீட்சைகள் இன்னும் நடைபெறவில்லை. அவற்றினை இலங்கை பரீட்சைகள் திணைக்களம் எதிர்வரும் மே மாதம் திட்டமிட்டிருக்கின்றது.

அந்தப் பரீட்சைக்குச் செல்லும் மாணவர்களுக்காக மூன்று பயிற்சிப் பரீட்சைகளை நாங்கள் ஆயத்தம் செய்திருக்கின்றோம். அவ்வாறே ஒவ்வொரு வகுப்புகளுக்கும் செயலட்டைகள் வழங்கியிருக்கின்றோம். அத்துடன் அதிபர்கள் தத்தமது பாடசாலைகளினூடாக அவர்கள் பூர்த்தி செய்திருக்கின்ற பாடவிதானத்தின் அடிப்படையில் பயிற்சி வினாக்களையும் செயலட்டைகளையும் மட்டக்களப்பு கல்வி வலயம் மாத்திரமல்ல மாகாணக் கல்விப் பணிமனையினூடாகவும் வழங்கப்பட்டுள்ளது-என்றார்.

(அ)





# எரிபொருளை அநாவசியமாக விலை உயர்த்துகின்றது ஐ.ஓ.சி.!

## *மஹிந்த அமரவீர திருமலையில் குற்றச்சாட்டு*

**திருமலை, மார்ச் 29**

**ஐ.ஓ.சி நிறுவனமானது எரிபொருளின் விலைகளை அனாவசிய முறையில் அதிகரித்துச் செல்வதாக தமக்கு அறிவித்தல்கள் வந்துள்ளதாகவும் அவ்வாறு அதிகரிக்கப்பட்ட விலை உயர்வுகள் சட்டத்துக்கு முரணானதாக இருந்தால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு அவ்வாறு உயர்த்தப்பட்ட எரிபொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் என்ற வகையில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகவும் சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

திருகோணமலை - இலுப்பங்குளம் வீதியில் சட்டவிரோதமாக கிரவல் அகழ்வு மேற்கொண்டு எவ்விதமான புனரமைப்பும் இல்லாத நிலையில் கைவிடப்பட்ட 25 ஏக்கர் நிலப்பரப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு நேற்று முன்தினம் திருகோணமலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் கருத்து தெரிவிக்கையில்-

இப்பிரதேசத்தில் சட்டவிரோத அகழ்வினால் குறித்த பிரதேசம் எந்த ஒரு அபிவிருத்தியும் இல்லாமல் காணப்படுவதுடன், குறித்த பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு நிலத்தினை சமாந்தரமாக வெட்டப்பட்டு வன பிரதேசத்திற்குச் சொந்தமான குறித்த பிரதேசத்தை அபிவிருத்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது-என்றார்.

மேலும் சம்பூர் பிரதேசத்தில் அமைக்கப்படவிருக்கும் சூரிய மின் உற்பத்தி நிலையத்தை இந்திய நிறுவனம் ஒன்றிற்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில்,

சம்பூர் பிரதேசத்தில் காற்றாடி மட்டும் சூரிய மின்கலத்தின் ஊடாக மின் உற்பத்தியினை பெரும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான வேலைத்திட்டங்கள் நாட்டின் பல பகுதிகளிலும் முன்னெடுத்து வருவதுடன் இதுவரை எந்த ஒரு வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் குறித்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான எந்த ஒரு ஒப்பந்தமும் கைச்சாத்திடவில்லை-என்றார்.

மேலும் இலங்கை மின்சார தனியார் நிறுவனம் கடந்த காலங்களில் பெரும் அளவிலான இலாபம் ஈட்டுவதாகவும் இலங்கை மின்சார சபை நட்டத்தில் இயங்குவதாகவும் வெளிவருகின்ற கருத்துக்கள் தொடர்பில் உங்கள் கருத்து என்ன என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில்,

இலங்கை மின்சார சபைக்குள் சில கட்டுப்பாடுகள், அளவுக்கு அதிகமான ஊழியர்கள் போன்ற பல பிரச்னைகள் இருக்க முடியும். மேலும் மின்சார சபை ஒன்றியத்தினர் மேற்கொள்ளும் சில முரண்பாடான செயற்பாடுகளும் இவ்வாறு மின்சார சபை நட்டத்தில் இயங்குவதற்கான காரணமாகவும் இருக்கலாம்-என்றார்.

(அ)

# அரசியல்வாதிகளின் கைக்கூலிகளாக கல்வி அதிகாரிகள் செயற்படுகின்றனர்

## ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு

*மட்டக்களப்பு, மார்ச் 29*

கிழக்கு மாகாணத்தில் கல்வி அதிகாரிகள் அரசியல் வாதிகளின் கைக்கூலிகளாகவே செயற்பட்டு வருவதனால் மாணவர்களது கல்வி முன்னேற்றத்திற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட பேராளர் மாநாடு மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் பொன்னுத்துரை உதயரூபன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-




கிழக்கு மாகாணத்தில் அரசியல்வாதிகள் தங்களது நலனுக்காகவும் செயற்பாடுகளுக்காகவும் கல்வி அதிகாரிகளைப் பயன்படுத்திவருகின்றனர். இதனை அரசாங்கம் மற்றும் கல்வி அமைச்சு கண்காணித்து இச்செற்பாடுகளுக்கு அனுமதிக்கக்கூடாது.

இலங்கை ஆசிரியர் சங்கமானது இலங்கையில் எவ்வித அரசியல் பக்கச்சார்புகளும் இல்லாது முறையாகச் செயற்படுகின்ற ஒருதொழில்

சங்கமாக இருக்கின்றது. இச்சங்கம் 1954 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. இத்தோடு 1912 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வடமாகாண ஆசிரியர் சங்கமும் இணைந்து சேவையாற்றி வருகின்றோம்.

இச்சங்கம் அரசியல் சார்ந்து செயற்படுவது இல்லை. அரசியல் சார்ந்த பல தொழில் சங்கங்கள் இருக்கின்றன.அவர்கள் அரசில்வாதிக்கு சாதகமாவே இருப்பார்கள். நாம் அப்படி இல்லை.ஆசிரியர்களது நலன் சார்ந்து செயற்படுவோம்-என்றார்.

(அ)

# கொரியாவை போல் உக்ரைனையும் இரு நாடுகளாக பிரிக்க ரஷ்யா சதி!

## உளவுத்துறை தலைவர் குற்றச்சாட்டு

கீவ், மார்ச் 29

கொரியாவை போல் உக்ரைனையும் இரு நாடுகளாக பிரிக்க ரஷ்யா முயற்சிக்கலாம் என உக்ரைன் உளவுத்துறை தலைவர் கிரிலோ புதானோவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி புடின் நினைப்பதைப் போல அவரால் உக்ரைன் முழுவதையும் ஆக்கிரமிக்க முடியாது. எனவே, கிழக்கு உக்ரைனை தனி நாடாகப் பிளவுபடுத்தி, கொரியாவில் செய்ததைப் போலவே அந்தப் பகுதியையும் காலம் முழுவதும் உக்ரைனுக்கு எதிராகத் திருப்பிவிட அவர் முயற்சிப்பார் என புதானோவ் எச்சரித்துள்ளார்.

1950-களில் நடைபெற்ற கொரியா போரில் கிம் இல்-சங் தலைமையிலான படைக்கு சோவியத் ஒன்றியம் ஆதரவளித்தது. அந்தப் போரின் முடிவில் கொரிய தீபகற்பம் வட கொரியா, தென் கொரியா என்று இரண்டாகப் பிரிந்ததை சுட்டிக்காட்டி உக்ரைன் உளவுத்துறை தலைவர் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு ஒரு மாதத்தைத் தாண்டி நீடித்து வரும் நிலையில் எந்தவொரு முக்கிய உக்ரேனிய நகரங்களையும் கைப்பற்ற முடியாது ரஷ்யப் படைகள் திணறி வருகின்றன.

இந்நிலையில் உக்ரைன் மீதான போரின் அடிப்படை நோக்கங்கள்



நிறைவடைந்துள்ளதாக தெரிவித்துள்ள ரஷ்யா, உக்ரைன் மீதான தனது படையெடுப்பு கிழக்கின் விடுதலையை நோக்கமாகக் கொண்டது என குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கருத்து போர் குறித்த ரஷ்யாவின் மூலோபாயக் கொள்கையில் சாத்தியமான மாற்றத்தைக் குறிப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் ஆக்கிரமித்துள்ள உக்ரைன் கிழக்கு பகுதிகளை பிரித்து, அதனை ரஷ்யா ஆட்டுவிக்கலாம் என ரஷ்யா உளவுத்துறைத் தலைவர் கிரிலோ புதானோவ் கூறினார்.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் தனது சார்பு அதிகாரிகளை உருவாக்கி, உக்ரேனிய நாணயத்தை கைவிட அங்குள்ள மக்களை ரஷ்யா கட்டாயப்படுத்தும் முயற்சிகளை நாங்கள் ஏற்கனவே காண்கிறோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

2014 இல் உக்ரேனிய தீபகற்பமான கிரிமியாவை ரஷ்யா கைப்பற்றிய பின்னர் அங்கு நடந்ததைப் போலவே, ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள கிழக்கு லுஹான்ஸ்க் பகுதியை ரஷ்யாவுடன் இணைப்பதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படலாம் எனவும் அவர் எச்சரித்தார்.

கிரிமியாவுக்கு தரைவழிப் பாதையை நிறுவ ரஷ்யா முயற்சிப்பதாகவும் புடானோவ் கூறினார், ஆனால் துறைமுக நகரமான மரியுபோலைக் கைப்பற்றுவதில் ரஷ்யா தோல்வியடைந்ததால் இந்தத் திட்டம் கைகூடவில்லை.

அசோவ் கடலில் உள்ள மரியுபோ நகரம் மூன்று வாரங்களுக்கும் மேலாக ரஷ்ய துருப்புக்களால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. அந்நகரம் மீது இடைவிடாத குண்டுவீச்சுகளை ரஷ்யா மேற்கொண்டு வருகிறது.

மரியுபோல் நகரத்தில் உள்ள உக்ரேனிய படைகள் ஆயுதங்களைக் கைவிட்டு சரணடைய வேண்டும் என கடந்த வாரம் ரஷ்யா இறுதிக் கெடு விதித்தது. எனினும் சரணடைவது என்ற பேச்சுக்கே இடமில்லை என இதனை உக்ரைன் உடனடியாகவே நிராகரித்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)



### 94 ஆவது ஒஸ்கார் விருதுகள் :

# சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருதை வென்றார் வில் ஸ்மித்!

லொஸ் ஏஞ்சல்ஸ், மார்ச் 29

94 ஆவது ஒஸ்கார் விருதுகள் வழங்கும் விழாவில் சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருதை வில் ஸ்மித் வென்றுள்ளார். சர்வதேச அளவில் திரைப்பட உலகின் மிக உயரிய விருதாக ஒஸ்கார் விருதுகள் கருதப்படுகின்றன.

நடப்பாண்டுக்கான 94 வது ஒஸ்கார் விருதுகள் வழங்கும் விழா அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இந்திய நேரப்படி நேற்று முன் தினம் காலை தொடங்கியது. ஹாலிவுட் பவுல்வார்ட் பகுதியில் உள்ள டால்பி திரையரங்கத்தில் விழா நடைபெற்றது.

இந்த ஆண்டு வாண்டா சைக்ஸ், ஏமி ஸ்கூமர், ரெஜினா ஹால் ஆகியோர் விழாவை தொகுத்து வழங்கினர். ஆஸ்கர் விருது விழாவை மூன்று பெண்கள் தொகுத்து வழங்குவது இதுவே முதன்முறை.

டெனிஸ் வில்லெனு இயக்கிய அமெரிக்க திரைப்படமான "டியூன்" திரைப்படம், சிறந்த விஷுவல் எபெக்ட்ஸ், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த தயாரிப்பு வடிவமைப்பு, சிறந்த பின்னணி இசை, சிறந்த படத் தொகுப்பு, சிறந்த ஒலி ஆகிய 6 பிரிவுகளில் ஒஸ்கார் விருதுகளை தட்டிச் சென்றுள்ளது.

சிறந்த அனிமேஷன் திரைப்படத்திற்கான ஒஸ்கார் விருது என்காண்டோ திரைப்படத்திற்கு கிடைத்துள்ளது.

ஜப்பானிய திரைப்படமான "டிரைவ் மை கார்" சிறந்த சர்வதேச திரைப்படத்திற்கான ஒஸ்கார் விருதை வென்றது. சிறந்த ஆவண குறும்படத்துக்கான விருதை 'தி குயின் ஆப் பேஸ்கட்பால்' திரைப்படம் வென்றது.

கோடா திரைப்படத்தில் நடித்த ட்ராய் கோட்சூர் சிறந்த துணை நடிகருக்கான ஒஸ்கார் விருதை வென்றார்.

வெஸ்ட் சைடு ஸ்டோரி திரைப்படத்தில் நடித்த அரியானா டிபோஸ் சிறந்த துணை நடிகைக்கான ஒஸ்கார் விருது வென்றுள்ளார். (அ)

# சீனாவை நோக்கி ரஷ்யாவை தள்ளுவது மிகப்பெரும் ஆபத்து

## ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை

பிரஸ்ஸல்ஸ், மார்ச் 29

உக்ரைன் நெருக்கடி மற்றும் மேற்குலகத்தின் பதில்கள் ரஷ்யாவை சீனாவை நோக்கித் தள்ளக்கூடும் என ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐரோப்பாவுக்கு ஆபத்தான நிலைமையாக இந்த நடவடிக்கை மாறும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார கொள்கை பிரதானி ஜோசப் பொரெல் தெரிவித்துள்ளார்.

டோஹா மன்றத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவ்வாறு செய்வது உலகளாவிய வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் பாரிய பிளவை ஏற்படுத்தக் கூடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் அவ்வாறானதொரு நிலை தவிர்க்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாம் தவிர்க்க முடியாமல் ரஷ்யாவை சீனாவிற்குள் தள்ள முடியும் என்பது நடந்து வரும் விடயங்களில் மோசமான விளைவுகளில் ஒன்றாகி விடும்.

தென்கிழக்கு மற்றும் வடமேற்கு இடையே உலகளாவிய பிளவை உருவாக்க முடியும் என என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முதலாவதாக, அத்தகைய உலகளாவிய பிளவு ஏற்படுவதைத் தடுக்க உக்ரைன் மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்குலக நாடுகள் துரிதப்படுத்தவேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார்.

உக்ரைனினுள் ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் மேற்கொள்வதுடன், இராணுவம் மற்றும் உபகரணங்களை தொடர்ந்து இழப்பதாலும் எதிரிகளை நசுக்கும் போராக இது மாறியுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## கோவிட் தொற்று அதிரிப்பு:

# மிகப்பெரிய நகரத்தை உடன் முடக்கியது சீனா!

பீஜிங், மார்ச் 29

சீனாவின் நிதி மையமான ஷங்காய், அறிகுறியற்ற நோய்த்தொற்றுகளுக்கான புதிய தினசரி பதிவைப் பதிவு செய்ததன் பின்னர் முடக்கப்பட்டுள்ளது.

ஒன்பது நாட்களுக்குள் கோவிட்-19 பரிசோதனையை மேற்கொள்ள இரண்டு கட்டங்களாக நகரத்தை முடக்குவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஷங்காய் நகரின் வழியாக செல்லும் ஹுவாங்பு நதியை வழிகாட்டியாகப் பயன்படுத்தி, ஷங்காயை இரண்டாகப் பிரிப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆற்றின் கிழக்கே உள்ள மாவட்டங்கள் மற்றும் அதன் மேற்கில் உள்ள சில மாவட்டங்கள் நேற்று முதல் ஏப்ரல் 1ஆம் திகதி வரை முடக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்படும்.

மீதமுள்ள பகுதிகள் ஏப்ரல் 1ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை முடக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்படும்.

பொது சேவைகளை வழங்குவதிலும் அல்லது உணவு வழங்குவதிலும் ஈடுபட்டுள்ள நிறுவனங்களைத் தவிர, அனைத்து நிறுவனங்களும்



தொழிற்சாலைகளும் முடக்கநிலையின்போது உற்பத்தியை அல்லது தொலைதூரத்தில் வேலை செய்வதை நிறுத்திவிடும்.


'பொதுமக்கள் நகரின் தொற்றுநோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுப் பணிகளை ஆதரிக்கவும், புரிந்து கொள்ளவும், ஒத்துழைக்கவும், நியூக்ளிக் அமில சோதனையில் ஒழுங்கான முறையில் பங்கேற்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்' என்று அரசாங்கம் கூறியுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கோவிட் தொற்று பரவல் தொடங்கியதிலிருந்து சீனா அதன் மிகப் பெரிய நகரமான ஷங்காயை முடக்கவில்லை.

ஒரு மாத காலமாக புதிய தொற்றுநோய்களை எதிர்த்துப் போராடிவரும் ஷங்காய், பொருளாதாரத்தை சீர்குலைப்பதைத் தவிர்ப்பதற்காக சுமார் 25 மில்லியன் மக்கள் வசிக்கும் நகரத்தை முடக்குவதை அதிகாரிகள் இதுவரை எதிர்த்துவந்தனர்.

ஆனால் தொற்றுநோயின் ஆரம்ப நாட்களிலிருந்து சனிக்கிழமையன்று ஷங்காய் அதன் அதிகபட்ச தினசரி தொற்றுகளைப் பதிவு செய்த பிறகு, அதிகாரிகள் போக்கை மாற்றியதாகத் தெரிகிறது.

ஷங்காய் நகரம் 2,631 புதிய அறிகுறியற்ற தொற்றுகளைப் பதிவுசெய்தது. இது சீனாவின் மொத்த புதிய அறிகுறியற்ற தொற்றுகளில் கிட்டத்தட்ட 60 சதவீதத்திற்கும் அதிகமாகும். மேலும் அறிகுறிகளுடன் 47 புதிய தொற்றுகளும் அடங்கும். (அ)



# கார்கிவ் அணு மையத்தில் ரஷ்யா மீண்டும் தாக்குதல்

உக்ரைனின் கார்கிவ் நகரிலுள்ள அணுசக்தி மையத்தில் ரஷ்யப் படையினர் மீண்டும் ரொக்கெட் குண்டுத் தாக்குதல் நடத்தியதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து உக்ரைன் அணுசக்தி ஒழுங்காற்று அமைப்பு அதிகாரிகள் கூறுகையில், கார்கிவ் இயற்பியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் நியூட்ரான் ஆய்வகத்தின் மீது ரஷியப் படையினர் சனிக்கிழமை தாக்குதல் நடத்தியதாகக் தெரிவித்தனர்.

தாக்குதல் தொடர்வதால் அங்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து தெரிந்து கொள்ள முடியவில்லை என்றும் அவர் கள் கூறினர். ஏற்கெனவே அந்த மையத் தில் நடத்தப்பட்ட தாக்குதலில் கதிர் வீச்சு அபாயம் ஏற்படவில்லை என்று அதிகாரிகள் கூறியிருந்தனர். (அ)



### ஐ. பி. எல். இருபது - 20 தொடர்:

# பஞ்சாப் அணியிடம் பணிந்தது பெங்களூர்!

மும்பை, மார்ச் 29

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூார் அணியை 5 விக்கெட்களால் வீழ்த்தி வாகைசூடியது பஞ்சாப் கிங்ஸ் அணி.

ஐ. பி. எல். என்று அழைக்கப்படும் இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் மூன்றாவது போட்டி நேற்றுமுன்தினம் இரவு மும்பையில் நடந்தது. இதில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூார், பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூார் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து 205 ஓட்டங்களைக் குவித்தது.

இதில், அணித் தலைவர் டு பிளசிஸ் 57 பந்துகளில் 7 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளுடன் 88 ஓட்டங்களைக் குவித்தார்.

முதலாவது விக்கெட்டுக்காக அனுஜ் ராவத்துடன் 50 ஓட்டங்களைப் பகிர்ந்த டு பிளசிஸ், 2ஆவது விக்கெட்டுக்காக விராட் கோலியுடன் 118 ஓட்டங்களைப் பகிர்ந்தார். ராவத் 21 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து, கோலி தினேஷ் கார்த்திக் ஆகியோர் மூன்றாவது விக்கெட்டுக்கான இணைப்பாட்டமாக 17 பந்துகளில் 37 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். தினேஷ் கார்த்திக் 32 ஓட்டங்களுடனும், கோலி 41 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் 19 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இந்த வெற்றியில் 6ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஷாருக் கான், ஓடியன் ஸ்மித் ஆகியோர் அதிரடியாக ஆடி 25 பந்துகளில் பகிர்ந்த 52 ஓட்டங்களை எடுத்து வெற்றியை இலகுவாக்கினர்.

இவர்களுக்கு முன்னதாக மயங்க் அகர்வால் 32 ஓட்டங்கள், ஷிகர் தவான் 43 ஓட்டங்கள், லியொம் லிவிங்ஸ்ரன்19 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

இறுதியில் சிறப்பாக ஆடிய ஷாருக்கான 24, ஸ்மித் 25 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர். இதில் ஸ்மித் வெறும் 8 பந்துகளில் 3 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 25 ஓட்டங்களை குவித்திருந்தார். அத்துடன் ஆட்டநாயகனாகவும் தெரிவானார். (ஐ)

# பறிக்கப்படுமா ரூட்டின் பதவி?

லண்டன், மார்ச் 29

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் இங்கிலாந்து அணி தோல்வியடைந்துள்ளது. இதையடுத்து ரூட்டின் தலைமைப் பதவி பறிக்கப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஏனெனில், கடந்த 5 டெஸ்ட் தொடர்களில் 4இல் இங்கிலாந்து அணி தோல்வியைத் தழுவியுள்ளது. இதில், ஒன்றில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 1 - 2 என்ற கணக்கில் பின்தங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தவிர, வெளிநாடுகளில் விளையாடி மூன்று தொடர்களையும் தாயகத்தில் விளையாடிய இரு தொடர்களையும் அந்த அணி இழந்துள்ளது. டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் 9ஆவது இடத்தில் இருக்கும் அந்த அணி ஒரு போட்டியில் மட்டும் வெற்றியும் 7 போட்டிகளில் தோல்வியும் அடைந்துள்ளது.

இந்நிலையிலேயே, இங்கிலாந்து அணியின் தலைவரான ரூட்டின் பதவி பறிக்கப்பட வேண்டும். புதிய தலைவர் நியமிக்கப்பட வேண்டும் என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஆனாலும், ரூட் தொடர்ந்து தலைமைப் பதவியில் இருக்கவே விருப்பம் தெரிவித்துள்ளார். எனினும், இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் முடிவு இதுவரை அறிவிக்கப்படவில்லை.

### ஐ. பி. எல். இருபது - 20 தொடர்:

# மும்பையை வீழ்த்தியது டில்லி கப்பிட்டல்ஸ் அணி!

மும்பை, மார்ச் 29

மும்பை இந்தியன்ஸ் அணியை 4 விக்கெட்களால் வெற்றி கொண்டது டில்லி கப்பிட்டல்ஸ் அணி.

ஐ. பி. எல். என்று அழைக்கப்படும் இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் இரண்டாவது போட்டி நேற்றுமுன்தினம் பகல் மும்பையில் நடந்தது. இதில், மும்பை இந்தியன்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

மிகவும் விறுவிறுப்பை ஏற்படுத்திய இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்ப வீரரான இஷான் கிஷான் கடைசிவரை துடுப்பெடுத்தாடி 48 பந்துகளை எதிர்கொண்டு 11 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 81 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

இவர் முதல் விக்கெட்டுக்காக அணித் தலைவர் ரோகித் சர்மாவுடன் 67 ஓட்டங்களை பகிர்ந்திருந்தார். ரோகித் 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து, திலக் 22 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றிருந்தார்.



டில்லி அணியின் பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கலீல் அஹ்மத் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டில்லி கப்பிட்டல்ஸ் 18.2 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்று அபார வெற்றியீட்டியது.

டில்லி கப்பிட்டல்ஸ் 14ஆவது ஓவரில் 6 விக்கெட்களை இழந்து 104 ஓட்டங்களை மாத்திரம் பெற்றிருந்ததால் மும்பை இந்தியன்ஸ் வெற்றி பெற்றுவிடும் என கருதப்பட்டது.

ஆனால், லலித் யாதவ், அக்சர் பட்டேல் ஆகிய இருவரும் பிரிக்கப்படாத 7ஆவது விக்கெட்டில் 30 பந்துகளில் 75 ஓட்டங்களைப் பகிர்ந்து டில்லி கப்பிட்டல்ஸ் அணியை வெற்றிபெறச் செய்தனர்.

லலித் யாதவ் 38 பந்துகளில் 48 ஓட்டங்களுடனும் அக்சர் பட்டேல் 17 பந்துகளில் 38 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். (ஐ)

# மேற்கிந்தியாவுடனான டெஸ்ட் தொடரை இழந்தது இங்கிலாந்து

கிரனெடா, மார்ச் 29

இங்கிலாந்துக்கு எதிராக கிரனெடாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவுக்கு வந்த கடைசி டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் 10 விக்கெட்களால் வெற்றியீட்டியது.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1 - 0 என்றகணக்கில் மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது.

இந்தத் தொடர் வெற்றியானது மேற்கிந்தியத் தீவுகளைப் பொறுத்த மட்டில் சிறப்பு வாய்ந்ததாகும். இங்கிலாந்துக்கு எதிராக தனது சொந்த மண்ணில் 1968க்குப் பின்னர் ஒரே ஒரு தடவை மாத்திரம் டெஸ்ட் போட்டி ஒன்றில் (2004இல்) மேற்கிந்தியத் தீவுகள் தோல்வி அடைந்துள்ளது. அதன் பின்னர் தனது சொந்த மண்ணில் இங்கிலாந்திடம் டெஸ்ட் தொடர்களில் மேற்கிந்தியத் தீவுகள் தோல்வி அடையாமல் இருந்து வருகின்றது அந்த சாதனையை தக்கவைத்துள்ளது.

கிரனெடாவில் குறைந்த மொத்த எண்ணிக்கைகள் பெறப்பட்டதும் நான்கு நாட்களுக்குள் நிறைவடைந்ததுமான கடைசி டெஸ்ட் போட்டியில் ஜோஷுவா த சில்வா குவித்த சதம், கெய்ல் மேயர்ஸ் கைப்பற்றிய 5 விக்கெட்கள் என்பன மேற்கிந்தியத் தீவுகளின் வெற்றியில் பெரும் பங்காற்றின.

போட்டியின் நான்காம் நாளான ஞாயிற்றுக்கிழமை காலை வெற்றிக்கு தேவைப்பட்ட 28 ஓட்டங்களை 4.5 ஓவர்களில் மேற்கிந்தியத் தீவுகள் பெற்றது.




முன்னதாக தனது 2ஆவது இனிங்ஸை 8 விக்கெட் இழப்புக்கு 108 ஓட்டங்களிலிருந்து தொடர்ந்தது இங்கிலாந்து. அடுத்த 10.2 ஓவர்களில் மேலும் 12 ஓட்டங்கள் சேர்ந்த நிலையில் கடைசி 2 விக்கெட்களையும் அந்த அணி இழந்தது.

கடந்த புதன்கிழமை ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சுகளை எதிர்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கிய இங்கிலாந்து இரண்டு இனிங்ஸ்களிலும் மொத்தமாக 324 ஓட்டங்களையே பெற்றது.

முதல் இனிங்ஸில் கடைநிலை துடுப்பாட்ட வீரர்களான 10ஆம் இலக்க வீரர் ஜெக் லீச், 11ஆம் இலக்க வீரர் சக்கிப் மஹ்மூத் ஆகிய இருவரும் 10ஆவது விக்கெட்டில் பகிர்ந்த 90 ஓட்டங்களின் உதவியுடனேயே இங்கிலாந்து 204 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகளும் முதலாவது இனிங்ஸில் தடுமாற்றத்தை எதிர்கொண்டது. எனினும் ஜோஷுவா த சில்வா குவித்த சதம், பின்வரிசை வீரர்களான அல்ஸாரி ஜோசப், கெமர் ரோச் ஆகியோரின் அதிகபட்ச பங்களிப்புகள் ஆகியவற்றுடன் முதல் இனிங்ஸ் நிறைவில் 93 ஓட்டங்களால் மேற்கிந்தியத் தீவுகள் முன்னிலை அடைந்தது. முதல் இனிங்ஸைவிட 2ஆவது இனிங்ஸ் துடுப்பாட்டத்தில் பெரும் சரிவு கண்ட இங்கிலாந்தால் 120 ஓட்டங்களையே பெறக்கூடியதாக இருந்தது.

கெய்ல் மேயர்ஸ் 9 ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 17 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 5 விக்கெட்களைக் கைப்பற்றி இங்கிலாந்துக்கு பெரும் சோதனையைக் கொடுத்தார்.

இங்கிலாந்தின் 2ஆவது இனிங்ஸில் அலெக்ஸ் லீஸ், ஜொனி பெயர்ஸ்ரோ, கிறிஸ் வோக்ஸ் ஆகிய மூவரே இரட்டை இலக்க எண்ணிக்கைகளை பெற்றனர்.



# நீர்கொழும்பு வீதியில் நேற்று எரிபொருள் கோரி போராட்டம்

கொழும்பு, மார்ச் 29
மக்களின் போராட்டம் காரணமாக கொழும்பு - நீர்கொழும்பு பிரதான வீதி கப்புவத்தை பகுதியில் தடைப்பட்டது.
இதனால், வீதியின் இரு புறமும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாகத் தெரிய வருகிறது.
எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியாத மக்கள் தமக்கு எரிபொருள் வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பொலிஸார் வந்து நிலைமையைக் கட்டுப்படுத்தினர். (அ)

## அரசை வீட்டுக்கு அனுப்புவதா?

# 31 ஆம் திகதியன்று கொழும்பில் அணிதிரளும் மகா சங்கத்தினர்

கொழும்பு, மார்ச் 29
**“மார்ச் 31 ஆம் திகதி மகா சங்கத்தினர் அபயராம விகாரையில் ஒன்றுகூடவுள்ளனர். இதன்போது அரசு தொடர்பில் தீர்மானமொன்று எடுக்கப்படும்.”**
- இவ்வாறு அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:
நாட்டு மக்கள்மீது தொடர்ந்தும் சுமைகள் திணிக்கப்படுமானால் இந்த அரசுக்கு எதிராக நாமும் வீதியில் இறங்குவோம். யாத்திரை செல்வோம். இந்த அரசு வீடு செல்லவேண்டும் என வலியுறுத்துவோம்.
எனவே, நாட்டில் ஆட்சி முகாமைத்துவத்தையும், கண்காணிப்பையும் மீண்டும் பொறுப்பேற்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுக்கின்றோம். ஜனாதிபதி பதவியில் கோத்தாபய இருக்கட்டும். பஸிலி ராஜபக்ஷவுக்கு நிதி அமைச்சு அல்லாமல், பிறிதொரு அபிவிருத்தி அமைச்சு பதவியை வழங்கலாம்.
இம்மாதம் 31 ஆம் திகதி மகாசங்கத்தினர் ஒன்றுகூடவுள்ளோம். இதன்போது அரசு தொடர்பில் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும்.” - என்றார். (அ)

# போதியளவு எரிபொருள் நாட்டில் கையிருப்பில்!

கொழும்பு, மார்ச் 29
நாட்டில் எரிபொருள் கையிருப்பு போதியளவு உள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.
எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கவேண்டிய அவசியம் இல்லை என கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.
மக்கள் தேவைக்கு அதிகமாக எரிபொருளை வாங்கிக் குவிப்பதால், எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் எரிபொருளை விநியோகிப்பதால் தாமதம் ஏற்படுவதாக அவர் கூறுகிறார்.
ஐ.ஓ.சி எரிபொருள் விலை உயர்வால், சிபெட்கோ எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு மக்கள் அதிகளவில் குவிந்து வருவதாக அவர் கூறினார். (அ)

# ஜனாதிபதி கோட்டாபய மிகவும் பலவீனமானவர்

## வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கூறுகிறார்


நிந்தவூர், மார்ச் 29
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மிகவும் பலவீனமானவர், அவருக்கு முதுகெலும்பு என்பது கிடையாது என வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் உபுலாங்கனி மாலகமுவ தெரிவித்தார்.
நிந்தவூர் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ரொம்ப ரொம்ப பலவீனம் ஆனவர். அவர் இராணுவத்தில் இருந்தார் என்பது வேறு விடயம். அவர் ஏனையோரின் உத்தரவு, அறிவுறுத்தல் ஆகியவற்றுக்கு அமையவே அங்கு செயற்பட்டார் என்பதே உண்மை.
அவருக்கு முதுகெலும்பு கிடையாது. ஆனால் தலைக்கனம் அளவுக்கு மிஞ்சி கிடக்கின்றது. எவருடைய சொல்லையும் கேட்டு நடப்பதாக இல்லை. இந்நாட்டை பீடித்த சாபக்கேடாக பஸில் ராஜபக்ஷ இருக்கின்றார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீது நிச்சயமாக ஒரு நன்மதிப்பு இருந்தது. ஆனால் இப்போது அதுவும் இல்லாமல் போய்விட்டது.
நாடு கெட்டு குட்டி சுவராகி கொண்டிருக்கின்றது. ஏதிலிகளாக நாட்டு மக்கள் மாறி கொண்டிருக்கின்றனர். ஆட்சி மாற்றம் ஒன்றே மீட்சிக்கான ஒரே வழி.
ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பவேண்டும். அரசாங்கத்தை வீழ்த்தவேண்டும். இதற்காக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு பொங்கி எழவேண்டும்.
ஜனாதிபதி கோட்டாபய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அது ஒரு பாசாங்கு நாடகமே.
அவர்கள் எதையும் தமிழர்களுக்கு வழங்கப் போவதில்லை.
ஆட்சிக்கு வந்தவுடன் அழைத்து பேசி இருந்தால்கூட ஒரு பேச்சுக்கு அவரை நம்பியிருக்க முடியும்.
எமது கட்சிக்கு இன, மத, மொழி பேதங்கள் கிடையாது. அனைவரும் இந்நாட்டு மக்களே. அனைவரும் மகிழ்ச்சியாக, நிம்மதியாக, சமாதானமாக வாழ வேண்டும். நாம் வரவுள்ள எந்த தேர்தலாக இருந்தாலும் நிச்சயமாக நாடாளாவிய ரீதியில் போட்டியிடுவோம்- என்றார். (அ)

# நங்கூரம் திருடிய சந்தேகத்தின் பேரில் மாதகலில் கடற்படைச் சிப்பாய் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 29
மாதகல் கடற்கரையில் மீனவர்களின் படகுகளிலிருந்த நங்கூரங்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
கடந்த வருடம் மாதகல் - லூர்து மாதா கோவிலுக்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதியில் தரித்து விடப்பட்ட மீனவர்களின் படகுகளில் இருந்த நங்கூரங்கள் களவாடப்பட்டு, பட்டா ரக வாகனத்தில் ஏற்றிச் செல்லப்படுவதை அப்பகுதி மக்கள் அவதானித்துள்ளனர்.
இது தொடர்பாக இளவாலை பொலிஸாருக்கு பொதுமக்கள் வழங்கிய தகவல் அடிப்படையில் நங்கூரம் ஏற்றிய வாகனம் மடக்கிப் பிடிக்கப்பட்டது.
இதன்போது கைதான சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், கடற்படைச் சிப்பாய் ஒருவரே நங்கூரங்களை திருட உதவியதாக அவர்கள் வாக்குமூலம் அளித்திருந்தனர்.
அதனை அடுத்து முன்னெடுக்கப்பட்டு வந்த மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் கடற்படைச் சிப்பாய் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# வனவள திணைக்களத்தின் செயல்பாட்டை எதிர்த்து வவுனியாவில் நேற்று போராட்டம்

வவுனியா, மார்ச் 29
கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையை வனவளத்திணைக்களத்தினர் வேலி போட்டு அடைப்பதாக தெரிவித்து வவுனியா மதுராநகர் மற்றும் இத்திக்குளம் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
கடந்த சில நாட்களாக வனவளத்திணைக்களத்தினர் குறித்த பகுதிக்குள் கால்நடைகள் வருவதை தடை செய்யும் வகையில் வேலி அமைத்து கால்நடை வளர்ப்பாளர்களையும் அச்சுறுத்தி வந்துள்ளனர்.
இதன் காரணமாக தமது கால்நடைகளுக்கு உணவு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த பகுதிக்குள் காணப்படும் குளத்தின் நீரேந்து பிரதேசத்திலேயே கால்நடைகள் நீரை பருகுவதால் தற்போது அதுவும் தடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த கிராம மக்கள், தமது கால்நடைகளை மேய்ப்பதற்கான இடத்தை வேலி போட்டு அடைப்பதனை நிறுத்த வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)



# மதுபோதையில் வாகனம் செலுத்திய சுகாதார சேவை பணிப்பாளர் கைது

கொழும்பு, மார்ச் 29
மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலவாக்கலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
மதுபோதையில் கொட்டகலையிலிருந்து நுவரெலியா நோக்கி தனது உத்தியோகபூர்வ வாகனத்தை செலுத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார்.
வீதி போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தலவாக்கலை போக்குவரத்து பொலிஸாரால் பிரதான வீதியில் சென்ற வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டபோது குறித்த நபர் செலுத்திவந்த வாகனமும் பரிசோதிக்கப்பட்டது. அவர் மது அருந்தி விட்டு வாகனத்தை செலுத்தியமை பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
இதனையடுத்து, அவர் தலவாக்கலை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## சமஷ்டி...

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக் கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு,

தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கான நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பாக 1987 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 13ஆம் திருத்தமானது, நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து அது தமிழ் மக்களது இனப்பிரச்னைக்கு தீர்வு அல்ல என்ற அடிப்படையில் தமிழ் மக்கள் ஆரம் பத்திலிருந்தே அதனை நிராகரித்து வந் துள்ளனர். பாராளுமன்றத்தில் 13ஆம் திருத்தச் சட்ட வரைவு சமர்ப்பிக்கப் பட்டிருந்தபோது, தமிழர் அரசியல் அரங்கில் இயங்கிக் கொண்டிருந்த தரப் புக்கள், அந்த வரைவை பாராளு மன்றத்தில் சட்டமாக நிறைவேற் றப்படுவதை இந்தியா தடுக்க வேண்டும் என்று கோரி இந்திய பிரதமருக்கு எழுத்து மூலமாக தெரிவித்திருந்ததும் வரலாற்று நிகழ்வாகும்.

13ஆம் திருத்தமானது சட்ட மூலமாக நிறைவேற்றப்படுவதைத் தடுத்து நிறுத்து மாறு கோரப்பட்டதன் நோக்கமே, 13ஆம் திருத்தமானது, தமிழ் மக்களின் தீர்வு என்னும் விடயத்தில் ஆரம்பப் புள்ளியாகக்கூட கருதப்பட முடியாது என்பதனாலேயே. எனினும், தமிழ்த் தரப்பின் கோரிக்கைகள் புறக்கணிக்கப் பட்ட நிலையில், குறித்த 13ஆம் திருத்தச் சட்டமும் மாகாண சபைகள் சட்ட மூலமும் நிறைவேற்றப்பட்ட பின்னர் வடக்கு, கிழக்கு மாகாண சபை தேர்தல் நடைபெற்றபோது, தமிழர் அரசியல் அரங்கில் இயங்கிக் கொண்டிருந்த ஓர் அமைப்பு மட்டும் 1988இல் அந்தத் தேர்தலில் போட்டியிட்டு வட, கிழக்கு மாகாண சபையிலிருந்த நிர்வாகத்தைக் கைப்பற்றியிருந்தது.

இருந்த போதிலும் இதனூடாக எதனையுமே சாதிக்க முடியாது என்ற உண்மையை அனுபவ ரீதியாக உணர்ந்த போது, மாகாண சபையை பொறுப் பேற்றிருந்த அந்தத் தரப்புக்கூட, தாம் வகித்துவந்த மாகாண சபை அங்கத்து வத்தை இராஜிநாமா செய்து 13ஆம் திருத்தத்தை முற்று முழுதாக நிராகரித் திருந்தனர். இந்த நடவடிக்கையானது, தமிழர்களின் அரசியல் தீர்வு விடயத்தில், 13ஐ முன்னிறுத்தி நகர முடியாது என்பதை நிரூபிப்பதாகவும், 13 ஆம் திருத்தமானது தமிழர்களின் இனப்பிரச் னைக்கான தீர்வு விடயத்தில் ஆரம்பப் புள்ளியாகக்கூட கருதமுடியாது என்ற யாதார்த்தத்தை மீண்டும் நிலைநாட்டு வதாகவும் அமைந்துள்ளது.

34 வருடங்களுக்கு மேலாக இந்த 13ஆம் திருத்தமும் மகாகாண சபை களும், இலங்கை அரசியலமைப்பில் இருந்தும்கூட, தமிழ் மக்கள் தொடர்ச்சி யாக சந்தித்த அனைத்து தேர்தல்களிலும் ஒற்றையாட்சியை முற்று முழுதாக நிராகரித்தே தமது ஏகோபித்த ஆணையை வழங்கிவருகின்றனர். தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்படுகின்ற - தமிழ்த் தேசம் தன்னுடைய சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக் கூடிய - இணைந்த வடக்கு, கிழக்கு தாயகம் பாது காக்கப்படுகின்ற சமஷ்டித் தீர்வையே கோரி வருகின்றார்கள்.

13ஆம் திருத்தமும் மகாண சபை களும் கடந்த 34 வருடங்களாக நடை முறையில் இருக்கக்கூடியதாகவே, தமிழ் மக்களின் ஆணைகளைப் பெற்றவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் 13ஆம் திருத் தம் ஒரு பேசு பொருளா கக்கூட பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. அந்தவகை யில், கணக்கி லெடுக்கப்படாத - நிரா கரிக்கப்பட்ட ஒரு விடயமாகவே தமிழ்த் தேசிய அரங் கில் 13ஆம் திருத்தம் இருந்து வந்துள்ளது. தொடர்ந்தும் அவ்வாறே இருக்கிறது.

இந்நிலையிலேயே, கடந்த ஜனவரி 30ஆம் திகதி யாழ்ப்பாணம் கிட்டு பூங் காவிலும், மார்ச் 13ஆம் திகதி வவுனியா - தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டு திடலிலும், மக்கள் எழுச்சிப் பேரணிகள் நடைபெற்றி ருந்தன. அதில், தமிழ் மக்க ள் பல்லா யிரக்கணக்கில் அணிதிரண்டு, 13ஆம் திருத்தம் தீர்வுக்கான தொடக்கப் புள்ளியுமல்ல, இறுதித் தீர்வுமல்ல என்ப தனை ஆணித்தரமாக வெளிப்படுத்தினர். அத்துடன், ஒற்றையாட்சிக்குள் தமிழ் அரசியலை முடக்கும் வேலைத் திட்டங் களுக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் வகை யிலும், இதேவேளை - தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்படுகின்ற - இணைந்த வடக்கு, கிழக்கு தாயகத்தில், தமிழ் மக்க ளின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக் கின்ற சமஷ்டித் தீர்வே தேவை. இத்த கைய தீர்வை அடைந்து கொள்ள இந் திய அரசும் ஏனைய நட்பு நாடுகளும் இலங்கை மீது அழுத்தங்களைப் பிர யோகிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

இந்நிலையில் இந்தியாவின் நலன் களை உறுதிப்படுத்துவதற்கு ஈழதமிழ்த் தேசம் உறுதியாக செயல்பட்டு வரும் நிலையில், ஈழத் தமிழ்த் தேசமக்களின் நலன்களை பேணும் வகையில், இலங்கை அரசுமீது அழுத்தங்களை பிரயோகித்து, ஒற்றையாட்சி அரசியல் யாப்பை கொண்டுவருவதைத் தடுத்து, தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி அரசியல் யாப்பை கொண்டுவரு வதை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## புலம்பெயர்...

தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பிலும் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால், புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீது ராஜபக்ஷ அரசு ஆட்சிக்கு வந்ததும் தடைகளை விதித்திருந்தது. இந்த நிலை யில் புலம்பெயர் தமிழர்கள் எவ்வாறு நாட்டுக்குள் வருவது என்று கொழும்புச் செய்தியாளர் ஒருவர், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

"புலம்பெயர் தமிழர்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புக்கள் மீது விதிக் கப்பட்டுள்ள தடைகளை அரசு மீள் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கின் றது. கூட்டமைப்புடனான சந்திப்பின் போதும் இந்த விடயம் சுட்டிக்காட் டப்பட்டது" என்று பீரிஸ் குறிப்பிட் டார். (அ)

## தேசிய...

- இவ்வாறு முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"சர்வகட்சி மாநாட்டில் நீங்கள் கலந்துகொண்ட பின்னர், மக்கள் மத்தி யில் ஒருமாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இந்தப் பொருளாதார நெருக்கடியிலி ருந்து நாட்டை மீட்கக் கூடியவராக தங்களைக் கருதுகின்றார்கள். இவ்வா றான சூழலில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், தங்களைத் தேசிய அரசின் பிரதமராக நியமிக்க முயன்று வருகின் றார் எனவும், அதற்கு முன்னோடியா கவே அன்றைய கூட்டத்தில் தங்களிடம் மன்னிப்புக் கோரினார் எனவும் கூறப் படுகின்றது. அவ்வாறான முயற்சிகள் இடம்பெறுகின்றனவா? அவ்வாறான பொறுப்பு உங்களிடம் முன்வைக்கப்பட் டால் நீங்கள் பதவியை ஏற்றுக்கொள்வீர் களா?" என்று கொழும்புச் செய்தியாளர் ஒருவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அவர்,

நாட்டினதும் மக்களினதும் நலன் கருதியே சர்வகட்சி மாநாட்டில் பங் கேற்றேன். இந்த மாநாட்டைக் கூட்டச் சொல்லி பல மாதங்களுக்கு முன்னரே அரசிடம் கோரியிருந்தேன். காலம் தாழ்த்தியாவது மாநாட்டைக் கூட்டிப் பிரச்னைகளை ஆராய்ந்திருக்கின்றார்கள். எனது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி யுள்ளேன். அரசு எடுக்கப்போகும் நட வடிக்கைகளைப் பொறுந்திருந்துதான் பார்க்கவேண்டும்.

தேசிய அரசு தொடர்பாக அரச தரப் பில் இருந்து நேரடியாக என்னுடன் யாரும் எதுவும் பேசவில்லை. அப்படி யான வேண்டுதல்கள் முன்வைக்கப்பட் டால் பரிசீலித்து முடிவெடுப்பேன் - என்றார். (அ)

## புதிய அரசியலமைப்பு...

செல்வம் அடைக்கலநாதன் மற்றும் பேச்சாளர் சுமந்திரன் ஆகியோர் பங் கேற்றனர்.

இந்திய தரப்பில் வெளிவிவகார அமைச்சருடன், இலங்கைக்கான இந்தி யத் தூதுவர் கோபால் பாக்லே, அரசியல் விவகாரங்களுக்கான செயலர் பானு ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

சந்திப்பின் ஆரம்பத்திலேயே ஜனாதி பதியுடனான சந்திப்பு குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் கேட்டார்.

சந்திப்பு விடயங்களை விளக்கிய கூட் டமைப்பு தலைவர் இரா. சம்பந்தன் 13ஆவது திருத்தத்தைக்கூட முழுமை யாக நடைமுறைப்படுத்த அரச தரப்பு பின்னடிக்கிறது என்று சுட்டிக்காட்டி னார். அத்துடன், சுமந்திரனை அது தொடர்பில் விளக்கமளிக்குமாறும் கூறினார்.

ஜனாதிபதியுடனான பேச்சின் அடிப் படை அம்சங்களான வடக்கு, கிழக்கு காணிகள் அபகரிப்பு, அரசியல் கைதிக ளின் விடுதலை, அரசமைப்பு மூலமான தீர்வு, காணாமல் ஆக்கப்பட்டோர் உறவு களின் விவகாரம், புலம்பெயர் தமிழர் களின் முதலீடுகள் என 5 விடயங் களையும் விவரித்தார்.

இதைத் தொடர்ந்து கருத்துத் தெரி வித்த வெளிவிவகார அமைச்சர், "புதிய அரசமைப்பு விடயத்தில் கவனமாக இருங்கள். அதற்காகக் காத்திருக்காதீர் கள். அது முன்னரைப்போன்று இல்லா மலும்கூட இருக்கலாம். அத்துடன், புதிய அரசமைப்பு மூலம் தீர்வு காண முடியாத சூழல் கூட உருவாகலாம்", என்று அறிவுறுத்தினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட சித்தார்த்தன் எம். பி., "புதிய அரச மைப்பு உருவாகும் என்று நம்பவில்லை. அப்படியே வந்தாலும் அது பழையதை விட மோசமாகவே இருக்கும். ஆனால், அரசியல் கைதிகள் விடுதலை, காணி அபகரிப்பு விடயங்கள் சாத்தியமாகும் என்று நம்புகிறோம். இதைத் தொடர்ந்து அடுத்த கட்ட விடயங்களை தொடர்ந்து முன்னெடுப்போம்", என்றார்.

"இதுவே சரியான முறைமை", என்று கூறி ஜெய்சங்கர் அதை ஆமோதித்தார்.

தொடர்ந்து செல்வம் அடைக்கல நாதன் எம். பி."13ஐ முழுமையாக நடை முறைப்படுத்துமாறு இந்தியப் பிரதமரி டம் கடிதம் மூலம் கோரிய 6 தமிழ்த் தேசியக் கட்சிகளையும் இந்தியா அங்கீ கரிக்க வேண்டும். இது தொடர்பாக இந்தியா இதுவரை எந்தப் பதிலும் அளிக்கவில்லை. எனவே, இதற்கு தகுந்த பதிலை வழங்கி ஆறு கட்சிகளுக்கும் அங்கீகாரம் வழங்கும் பட்சத்திலேயே, அவை தொடர்ச்சியாக ஒற்றுமையாக பயணிக்க முடியும் - இது தொடர்பில் அரசாங்கத்துக்கும் அழுத்தம் உருவா கும்", என்று கூறினார்.

"இந்த விடயத்தில் அவதானம் செலுத்தப்படும்", என்று ஜெய்சங்கர் இதன்போது உறுதியளித்தார். (ஐ)

## ரணிலுக்கு...

அமைச்சர் ரோஹித அபே குணவர்தன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ் வாறு கூறினார்.

இதேவேளை, பஸில் ராஜபக்ஷதான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை உருவாக்கினார். அந்த கட்சிதான் இலங் கையில் இன்று பலம் வாய்ந்த கட்சியா கும். தற்போதுகூட மக்களை திரட்டும் சக்தி எம்மிடம் உள்ளது. பஸில் ராஜ பக்ஷ சுறுசுறுப்பாக இயங்கக்கூடியவர். அவரை வீழ்த்துவதற்கு முயற்சிக்கின் றனர். அது நடக்காது. 2015 இல் ராஜ பக்ஷக்களை வீழ்த்த பார்த்தனர். அது வும் முடியாமல் போனது. நிச்சயம் நாம் நெருக்கடி நிலையில் இருந்து மீண் டெழுவோம்" - என்றார். (அ)

## அரசியல்...

ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்று ஜனாதிபதியி டம் நாங்கள் தெரிவித்தோம். நியாய மான - நிரந்தரமான - நடைமுறைப் படுத்தக்கூடிய - அதியுச்ச அதிகாரப் பகிர்வு அடங்கிய ஒரு அரசியல் தீர்வு வராவிட்டால் அதை நாங்கள் ஏற்கமாட் டோம்.

இற்றைவரை நடைபெற்ற கருமங் களின் அடிப்படையில் - இற்றை வரை யில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் நிரந்தரமான அரசியல் தீர்வைக் காணவேண்டும்.

இதற்காக அரசுடன் நாங்கள் வெளிப் படையாகத் தொடர்ந்து பேசத் தயார்.

தீர்வுக்கான எமது இந்த நிலைப்பாட் டில் நாங்கள் எப்போதும் உறுதியாக நிற்போம் என்றும், இதிலிருந்து ஒரு போதும் பின்வாங்கமாட்டோம் என்றும் ஜனாதிபதியிடம் கூறினோம்.

வடக்கில் அரச திணைக்களங்களா லும் இராணுவத்தாலும் அபகரிக்கப்பட் டுள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி யிடம் கோரினோம். பேச்சின் பின்னர் அது தொடர்பில் அரசு நடவடிக்கை களை எடுத்துள்ளது என அறிந்தோம். எனினும், காணிகள் தாமதமின்றி படிப் படியாக விடுவிக்கப்பட வேண்டும்-என் றார். (அ)

## இந்தியா...

எரிபொருள், மருந்து உட்பட அத்தி யாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய வழங்கிய கடனுதவிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அமைச்சர் ஜெய்சங்கரிடம் நன்றி தெரிவித்தார்.

இந்த சந்திப்பு நேற்று ஜனாதிபதி மாளிகையில் நடந்துள்ளது.

சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். (அ)

## யாழ்ப்பாணம்...

இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் நேற்று நண்பகல் ஒரு மணிக்கு மெய்நிகர் வழி யில் திறந்து வைத்தனர்.

நண்பகல் 12 மணிக்கு திறப்புவிழா நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. முன்னதாகவே பண்பாட்டு மையத்தில் பிரமுகர்கள் அனைவரும் அமர்ந்திருந்போதும் ஒரு மணிக்கே நிகழ்வு ஆரம்பமாகியிருந்தது.

திறந்து வைக்கப்பட்ட யாழ்ப்பாண பண்பாட்டு மையத்தை கலாசார அலு வல்கள் அமைச்சின் செயலாளர் பேராசி ரியர் கபில குணவர்த்தனவிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில், கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்திய வெளியுறவு அமைச் சர் ஜெய்சங்கர், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், இலங்கைக் கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே, கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, கல்வியமைச்சர் தினேஷ் குண வர்த்தன, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண பண்பாட்டு மையத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, இலங்கைக்கான இந்திய துணைத் தூ துவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், யாழ். மாநகர சபை முதல்வர் வி. மணி வண்ணன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இந்தியாவிடம் மேலும் ஒரு பில்லியன் டொலர் கடன் எல்லை வசதியை கோரியது இலங்கை!

கொழும்பு, மார்ச் 29

**இலங்கையில் பொருளாதார நெருக்கடி நிலை தொடர்ந்து நீடித்து வரும் நிலையில், அத்தியாவசியமான பொருட்கள் இறக்குமதிக்காக இந்தியாவிடமிருந்து இலங்கை மேலதிகமாக ஒரு பில்லியன் டொலர் கடன் எல்லை வசதியை கோரியுள்ளதாக சர்வதேச ஊடகமொன்று வெளியிட்டுள்ளன.**

2020 ஜனவரியில் இருந்து இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு சுமார் 70 வீதம் குறைந்துள்ளது.

இதனால் அத்தியாவசிய உணவு மற்றும் எரிபொருள் இறக்குமதிக்கு கட்டணம் செலுத்துவதில் இலங்கை பாரிய நெருக்கடியை எதிர்கொண்டதாக குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை உலக நாடுகளின் உதவியை நாடிவருகிறது.

இதேவேளை, முன்னதாக இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையில் ஒரு பில்லியன் டொலர் குறுகிய கால சலுகைக் கடனுக்கான ஒப்பந்தம் கடந்த 17 ஆம்திகதி புதுடில்லியில் கைச்சாத்திடப்பட்டது.

இந்திய அரச வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தி, அதன் பிரதிப் பொது முகாமையாளர் ஷிரி புஷ்கார் மற்றும் இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப் படுத்தி நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிக்கல ஆகியோர் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

உணவு, மருந்துப்பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக இந்த ஒரு பில்லியன் டொலர் கடன் வசதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே, இலங்கை மேலும் ஒரு பில்லியன் டொலரை இந்தியாவிடம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)




இலங்கை - இந்திய நட்புறவின் அடையாளமாக யாழ்ப்பாணம் பண்பாட்டு மையம் நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் ஆகியோரால் நேற்று மதியம் ஒரு மணியளவில் மெய்நிகர்வழியில் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது இடம்பெற்ற கலைநிகழ்வுகளையும், நிகழ்வில் பங்கேற் றோரையும் படங்களில் காணலாமா. (படங்கள் - ஐ. சிவசாந்தன்)

## கோவிட் தொற்றினால் மேலும் 6 பேர் மரணம்

கொழும்பு, மார்ச் 29

இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது எண்ணிக்கை 16 ஆயிரத்து 465 ஆக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மேலும் 6 பேர் கொவிட் தொற்றால் மரணித்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 16, 465 ஆக அதிகரித்துள்ளது. (அ)

## இலங்கை-இந்திய கடற்படையின் கூட்டுப் பயிற்சி இன்றுடன் நிறைவு


கொழும்பு, மார்ச் 29

இலங்கை - இந்திய கடற்படையினர் இணைந்து இலங்கையின் மேற்கு கடற்பரப்பில் மேற்கொண்ட விசேட கூட்டு கடற்படை பயிற்சி நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவடையவுள்ளன.

வெவ்வேறு வேகத்தில் விமானங்களில் உலங்கு வானூர்திகளை தரையிறக்குதல், மீண்டும் ஏவுதல் மற்றும் கடல்சார் நடவடிக்கைகளின்போது விமானம் தாங்கிக் கப்பல்களுக்கு இடையே செய்திகளை பரிமாறிக்கொள்வது போன்ற நடைமுறை பயிற்சிகள் இங்கு நடத்தப்பட்டு வருவதாக கடற்படை தெரிவித்தது. (அ)

## பாராளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதியால்கூட முடியாது!

### கூறுகின்றார் சபாநாயகர்



கொழும்பு, மார்ச் 29

எதிர்வரும் இரண்டரை வருடங்களுக்கு ஜனாதிபதியால் கூட பாராளுமன்றத்தை கலைக்க முடியாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மாத்தறை, பலடுவ பௌத்த விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசியலமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்தை கலைக்க வழி உள்ளது. அதனை தவிர பாராளுமன்றத்தை எவராலும் கலைக்க முடியாது எனவும் அவர் கூறினார். (அ)

## பண்டிகைக் காலத்தில் தட்டுப்பாடின்றி அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கும்

கொழும்பு, மார்ச் 29

பண்டிகைக் காலத்தில் பொது மக்களுக்கு தட்டுப்பாடின்றி அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வோரின் சங்கம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 5ஆம்,6 ஆம் திகதிகளுக்கு பின்னர் பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை எந்தவித தட்டுப்பாடும் இன்றி வழங்கக்கூடியதாக இருக்கும் என்று சங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த காலப்பகுதியில் இந்திய கடனுதவியின் கீழ் துறைமுகத்தில் உள்ள அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை விரைவாக விடுவித்து பொருட்களை சந்தைக்கு விநியோகிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் சங்கத்தினர் தெரிவித்தனர்.

நாட்டில் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களில் சுமார் 50 வீதமானவை இந்தியாவில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றதாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ)

Dr. P. விக்கினேஸ்வரா நினைவு வணக்க நிகழ்வும், நூல் வெளியீடும்



Dr. P.**விக்கினேஸ்வராவின்** 31ஆம் நாள் நினைவு வணக்க நிகழ்வு (அந்தியேட்டி அழைப்பு) எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 - 13.30வரை சிட்னி முருகன் கோயில் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் Dr. P.**விக்கினேஸ்வரா** நினைவாக **“ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்”** என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்படும்.




RSVP:
Kumara Rajan : **0402 874 156**
Ainkaran : **0413 459 842**, Aravinthan : **0413 193 001**







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்




06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர் - மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி




5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**

7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : BLACK AND WHITE

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகேகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு